# பனித்துளிகள்

முருகுசுந்தரம்

— Eswari

பனித்துளிகள் ○ பாவலர் முருகுசுந்தரம் ○

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பனித்துளிகள்

'பாட்டுச் சிற்பி'

பாவலர் முருகுசுந்தரம்

அரிமாப் பதிப்பகம்

அம்மாப்பேட்டை, சேலம்-636 003

முதற் பதிப்பு — 1974

இரண்டாம் பதிப்பு — 1988

பதிப்புரிமை அரிமாப் பதிப்பகம் சேலம்-3

விலை உருபா 16—00

பக்கங்கள் 148+12=160

அச்சிட்டோர்

பொன்முடி அச்சகம் சேலம்—636 003

தொலைபேசி : 66221

# பதிப்புரை

கவிஞர் முருகுசுந்தரம் அவர்களைத் தமிழகம் நன்கறியும்.
நுண்மாண் நுழைபுலச் செவ்வியர்;
கற்பனையுலகின் நற்புனைவாளர்;
பாவேந்தர் பாசறையில்
நயந்துறைந்து உரம் பெற்ற ஒண்மையர்;
இந்நாள் தமிழகப் பாட்டரங்கில்
முந்தியிருக்கும் மொய்ம்பினர்;
இவரின் கவிதைக் கனிகள் மொழி, இனம்,
நாடு என்ற உணர்வுக்கு ஊட்டச்சத்தாய் அமைவன
கவிதைச் சுவைஞர்கட்குக் கணுவிலாக் கரும்பு.

இந்நூல் அரிமாவின் முதல் முழக்கம்;
சிப்பி ஈனுவதோ முத்து!
எங்கள் பதிப்பகம் வெளியிடுவதோ
இலக்கிய முத்துக்களே.
தமிழகத் தன்னுணர்வு எழுச்சிக்கு
அரிமா ஆற்றல் வேண்டி நிற்கிறது.

எங்கள் முதல் வெளியீடாக வெளிவர
தம் நூலையளித்த பாவலர்க்கு நன்றியுடையோம்.

'பாண்டியன் பவனி' என்ற பெயரில் இக்கவிதை நூலுக்கு
ஓர் அணிவகுப்பை நடத்திக் காட்டியுள்ள
இளம்பேரறிஞர் டாக்டர் ஔவை நடராசனார்க்கு
எம் இதய நன்றியை குவிக்கின்றோம்.
பனித்துளிகள் கவிதைச் சுவைஞர்கள் கையில் கனிக்குலை,
சுவைக்க வாரீர்' என்று அழைக்கின்றோம்.

தி. பி. 2005 — அன்புடன்

சேலம்-3 — அரிமாப் புலவர்

# பாண்டியன் பவனி

'கொழுந்துவிட்டெரியும் நெருப்பு வட்டத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரம்' என்று கலைஞர் ஓர் அழகான உவமையைக் கூறினர். ஆனல், இந்த நூலைப் பார்த்தபோது நீர்த்துப்போன கற்பூரங்களுக்கிடையே நிமிர்ந்து எரியும் சுடர்விளக்கு என்ற புது உவமையை எழுதலாம்போலத் தோன்றுகிறது. இங்கும் அங்கும் இறைந்து கிடக்கும் சொல் நட்சத்திரங்களுக்கிடையே, குளிர்ச்சியான ஒளிக்கற்றைகளால் வானத்தை வளைத்துக் கொண்டு ஒளி மழையைப் பொழிகின்றது இந்தக் கவிதைக் காப்பியம்,

கவிதை என்றல் என்ன? பக்கம் முழுதும் அச்சுக் கோக்காமல் பத்திபத்தியாகச் சொற்களைப் பதிய வைப்பதுதான் கவிதைபோலச் சிலருக்குத் தெரிகிறது. தன் சொற்களுக்குள் தத்துவார்த்தங்கள் பொதிந்திருப்பதாகத் தானே கருதிக்கொண்டு, விளங்காத மேகங்களுக்கு ஆட்பட்டு அவதிப்படும் அரைவேக்காடுகளின் நுரைச்சிதறல்கள் வேறு; தலைமுறையின் மரபைக் காக்காது, தலையின் புகழைத் தோள்வரை வளர்த்துக் கொள்வது நிமிட நேர ஆளுகைகளாக நிற்குமே தவிர, கால வெள்ளத்தின் எதிர் நீச்சலை எண்ணிக்கூடப் பார்க்க

டாக்டர் ஔவை நடராசன்

எம். ஏ., எம் லிட்., பிஎச் டி

முடியாதநிலையில் இழுத்துத் தள்ளப்படும் விபத்துக்கு இரையாகிவிடும். தன் சுதந்திரத்திற்குப் பங்கம் ஏற்படாதவாறு எல்லைச் சந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு, சங்கீதக்குரலின் ஏற்றத் தாழ்வுகளைப்போல் மேலும் கீழும் காற்றின் வயிற்றில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் பறவையின் நீச்சல் நெளிவுகளையே பாட்டென்று நான் நினைக்கிறேன். சோலையின் எல்லை வேண்டாம்; பாலையின் பக்கம் நான் செல்கிறேன் என்றால் பறவை அப்போது வானில் பறக்காது; மண்ணில்தான் கிடக்கும்; இல்லை... மரணப் பிடியில் தவித்துத் துடிக்கும். நீரின் ஆட்சிக்குள்ளேதான் மீன் துள்ளும்; நீரின் பரப்பைவிட்டால் துடியாய்த்துடிக்கும். துள்ளுவதுதான் உயிரின் சிலிர்ப்பு; துடிப்பதோ அழிவுக்கான அழைப்பு!

வடிவம் இருந்தும் மலர்ச்சி இல்லாத இலையுதிர் காலத்து எட்டி மரங்கள் ஒரு புறம் நிற்கின்றன. இந்த அழகில் முறிந்துபோன கிளைகளைப் புதிதென்று காட்டிக் கொள்ளும் வேரிழந்த மரங்கள் வேறு. இந்தச் சூழலில் கவிதைக்காதலன் வெயிலில் செல்கிறான். வேனிலில் நடக்கும் எங்களுக்குத் தளிர்களையும், பூக்களையும், கனி

களையும் தாங்கிக்கொண்டிருக்கும் கிளைகளால் 'ஒல்லேவா' என அழைப்பதோடு ஓவிய நிழலையும் விரித்து சேலம் மாங்கனிகளை உண்ணத் தருகிறது இந்தச் 'சுந்தர' மரம்.

---

மனத்தின் ஆழ்ந்தகன்ற அசைவுகளைச் சொல்லில் சுமந்துகாட்டும் சுரதாவின் ஜொலிப்புகள் சுந்தரத்திடமும் மின்னுகின்றன. எல்லேக்குள் ஓடுகின்ற ஓட்டத்தினுடைய வலிமை எழுச்சியோடு அதிகரிப்பதுபோல, இந்த நூலின் கவிதைகள் எல்லேயோடிணைந்து பிறந்ததனுல் மனத்தைக் கவர்கின்றன. உருவத்தோடுவரும் ஒலிதானே உவகையைத் தரும். கருத்துக் கருக்கொண்ட கற்பனைகளும், சந்தச் செறிவுகளும், சொல்நயங்களும், புதிய உவமைகளும், புன்னகை வரிகளும் முருகுசுந்தரம் கவிதைகளில் 'இதோ! இதோ!' என முரசொலிக்கின்றன. அடிக்கு அடி நடனத்தின் நளினத்தை வெளிப்படுத்தும் நங்கையைப்போல் இவரின் பாடல்களும் அடிக்கு அடி கவிதை நாகரிகத்தோடு நடைபயிடுகின்றன.

கவிதை என்பது உணர்ச்சி உதடுகள் உச்சரிக்கும் காதல் மொழி. இன்று சிலர் எழுதும் கவிதைகளைப் படிக்கும்போது, ஓர் ஆங்கிலப் பெண்ணிடமோ உருதுப் பெண்ணிடமோ, மலேயாளப் பெண்ணிடமோ, உறவாடுவதைப் போன்ற உணர்வுதான் தோன்றுகிறது. அவர்கள் உறவில் ஏதோ மயக்கம் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனல் அவர்களின் உள்ளத்து உணர்வுகளை நம்மால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிகிறதா? கவிஞர் முருகுவின் கவிதை, நம் சொந்த அத்தை மகள் எதிரில் நின்று பேசுவது போல் இருக்கிறது.

காவியங்கள் அதிகம் காணப்படாத குறையை இவரின் கண்ணீர்த்தவம் போக்குகிறது. தோன்றாத

எழுவாய்போல் இருக்கும் அணங்குகளின் இடையைக் கவிஞர் சொல்கிறார்;

இடைசிறுத்துப் பூவிரிந்து மெலிந்தி ருக்கும்
இளம்பிஞ்சு மாதுளையோ என்று சொல்லும்
உடலிடுப்பு மார்புடையாள்.

கண்ணீர்த்தவக் காவியநாயகியின் கூந்தலைக் 'கருங் குழல் நாகபந்தக் கவிதை' என்று கூறும் கற்பனை வரிகள் நெஞ்சில் நினைக்குந்தோறும் இனிக்கின்றன.

அறிஞர் பெர்னட்ஷா பற்றிய இவரின் சொல்லோவியம்:

நாக்கிறுக்கு; முதிர்ந்தமதிச் செருக்கு; தேம்சு
நதிநுரையைப் போன்றிருக்கும் வெள்ளைத் தாடி;
தீக்குச்சி போல்பற்றும் அறிவுக் கூர்மை;
தேளைப்போல் கொட்டுகின்ற கிண்டல் பேச்சு.

நம் சமுதாயத்திற்கு எந்தவிதத்திலும் பயன்படாமல், வீண் சுமையாகத் தொங்கிக் கொண்டிருக்கும் பணக்காரர்வீட்டுச் செல்லப் பிள்ளைகளைக் கவிஞர் தம் சூடான வரிகளால் சுடுகிறார்.

வாழ்க்கைப்போரை
வெல்லுகின்ற ஆடவரின் நடுவில், ஆறும்
விரல்போலப் பயனின்றிப் பிறப்பெ டுத்தோன்;
வல்லவர்கள் நல்லவர்கள் நடுவில், வீணாய்
வளர்ந்திருக்கும் சாப்பாட்டு வெள்ளித் தூக்கு.

பாரதி வழியில் பாவேந்தர்க்குப் பிறகு நம் கண்ணில்படும் கவிஞர்களில் முருகுசுந்தரம் ஒருவராக ஒளிச்

சுடராக விளங்குகிறார். இந்தப் படை வரிசையில் வந்து கொண்டிருந்த பலருக்கு வலிப்பும், சுளுக்கும் வந்திருப்பதைப் பார்க்கும்போது, பாட்டுத் தரை வீதியில் பாதத்தை ஊன்றிவைத்துப் பாண்டியனைப்போல் பவனி வரும் முருகுசுந்தரத்தை யாரும் பாராட்டாமலிருக்க முடியாது. வாய் வெருவல்களையெல்லாம் கவிதை வரிகளாக நம்புகிறவர்களுக்கு, உதட்டின் முறுவலைக் காணும்போது எத்தனை உற்சாகம் உண்டாகும்! அத்தனை மகிழ்ச்சியால், இதனை எழுதுகிறேன். இந்தத் தொகுப்பு, அழகிய கவிதைகளின் அணிவகுப்பு.

23—10—'74
சென்னை-2

ஔவை நடராசன்

# மாலை

பதிப்புரை
பாண்டியன் பவனி

## காவியம்

கண்ணீர்த்தவம் 1
பனித்துளிகள் 35

## பாட்டும் கதையும்

அறிஞனும் அழகியும் 49
வேந்தன் அணைத்த விளக்கு 52
நெருப்பில் வெந்த நிலா 56
போர்வை 63

## சுவைக்கு ஒன்று

ஊடலும் கூடலும் 69
மருத்துவ மான்கள் 72
என்றும் வாழும் 74
தமிழ்த்தேர் சாய்ந்தது 76
ஆண்டவன் கருணை 78
அவள் அடிகள் 81
பசி 83

## அரங்கம்


| | |
|---|---|
| குறிக்கோள்கள் | 87 |
| குழந்தை | 89 |
| வாய் | 98 |
| கண் | 102 |
| புகார் | 108 |
| கோவலன் | 113 |
| கண்ணகி | 117 |
| கடல் | 130 |
| குறிஞ்சி | 135 |
| மஞ்சள் | 140 |



# காவியம்

# கண்ணீர்த்தவம்

ஏக்கப் பெருமூச்சா !
இன்னிசைப் பாட்டா !

கண்ணீர்த் தவங்கள்
கடைப்பிடித்து நான்வளர்த்த
பன்னீர் வரங்களைப்
பறித்தெடுத்துச் சென்றவரார் ?

அரும்பி மலராத
ஆசையை எரிப்பதற்கு...

பண்ணிற் கலந்து இக் கண்ணீர் வரிகள்
என்றன் செவியில் இடறி விழுந்தன ;
வேதனைத் தூண்டில் விழுந்ததென் நெஞ்சில் ;
இதய நரம்பைப் பறித்தெடுத் தெவரோ
உதய ராகம் மீட்டுகின் றுரே !
ஏக்கப் பெருமூச்சை இன்னிசைப் படுத்திப்
பாக்க ளாகப் பாடுகின் றுரே !
இசையில் என்னை இழந்தப் பாடலை
ஆசைபோட்ட வண்ணம் மெதுவாய் நடந்தேன்.

காலைப் பனித்துளி முட்டைகள், என்றன்
கால்பட்டு உடைந்து கலைந்து சிதறின.
சும்மாட் டுத்தலைக் கிராமத்துப் பெண்டிர்
வாயை முன்றானையால் மறைத்த வண்ணம்
பாற்கூடை தூக்கி எதிரில் வந்தனர்.
கம்பங் கதிர்வால் அணிற்பிள்ளை போலக்
கவலை ஏற்றம் கத்திக்கொண் டிருந்தது.
மலையடி வாரத்தில் மாடுமேய்க் கின்ற
சிலைபோல் அழகுச் சிறுமி யொருத்திஅப்
பாடலைக் காற்றில் பரப்பிக்கொண் டிருந்தாள்.
காகித வீணையைக் கையில் ஏந்திச்
சிறுவன் ஒருவன் இன்னிசை கூட்டினான்.
திருச்செங் கோட்டில் வாழ்வோர்க் கெல்லாம்
பரிச்சய மான பாடல் இப்பாடல்.
பாடிய சோதையை நினைத்தேன்; நினைவுகள்
ஓடின, திரைப்படம் ஓடுவது போலே.

## பணத்தோட்டப் பைங்கொடி

கொக்கரக்கோ எனக்கூவும் குடுமிச் சேவல்
    கூப்பாட்டைக் கேட்டவுடன் பரிதிச் செல்வன்
அக்கரையில் கண்விழித்தான் ; இருட்டுப் பாயை
    அடிவானில் சுருட்டிவைத்தான் ; தான்வ ரைந்த
செக்கர்வான் வெட்கமுற மாடி மீது
    செழுங்கதிரோன் எழுந்திருக்கக் கண்டான் ; ஓடி
அக்கணமே மேகத்தில் மறைந்து பார்த்தான் ;
    அழகரசின் ஆதிக்கம் ; அவள்தான் கோதை !

வெடித்தவுடன் பாளையிலே புதிய பூக்கள்
    வேர்மீதில் உதிர்வதைப்போல் கையைத் தூக்கி
உடற்சோம்பல் முறித்தவுடன் அவளு டம்பின்
    ஒய்யாரம் காலடியில் சிந்தும் ; பட்டுப்
படுக்கைமஞ்சம் இவ்வழகி மீண்டும் வந்து
    பள்ளிகொள்ள மாட்டாளா என்று நையும் ;
அடிக்கால்கள் இவளுடம்பைத் தாங்கித் தாங்கி
    ஆனந்தக் களிப்பாலே செருக்குக் கொள்ளும்.

இடைசிறுத்துப் பூவிரிந்து மெலிந்திருக்கும்
இளம்பிஞ்சு மாதுளையோ என்று சொல்லும்
உடலிடுப்பு மார்புடையாள்; ஒசிந்து செல்லும்
ஊஞ்சல்போல் நடையுடையாள்; கோடி இன்பம்
அடுக்கிவைத்த கருவூல நங்கை; நாணம்
அலங்கரிக்கும் பல்லக்கு; பார்த்த கண்கள்
தடுக்கிவிழும் அடுக்குமலைச் சாரல்; தாவும்
தலைசத்தென்றல்; இசைத்தமிழின் மனிதத் தோற்றம்.

வேலப்ப முதலியென்றால் அறியார்; ஆனால்
வெல்லச்சு முதலியென்றால் அக்கம் பக்கம்
நாலுதிக்கும் நன்கறியும்; வயிற்றுறுப்பு
நாற்புறமும் உடம்பாக வளர்ந்த தோற்றம்;
நீலக்கல் கணையாழி; நண்டுக் கண்போல்
நீட்டிக்கொண் டிருக்கின்ற கடுக்கன்; இந்தக்
கோலத்தைக் கொண்டிருக்கும் முதலி யார்க்குக்
கோதைமகள்; கொஞ்சிவரும் குமரிச் செல்வம்.

குடைக்காம்புக் கதிர்ச்செந்நெல் தோட்டம், அம்மன்
குளத்தருகே அவர்க்குண்டு; மலையோரத்தில்
அடுக்குவைத்த மாளிகையும் தெருப்பணத்தை
அளக்கின்ற அங்காடிக் கடையும், ஊரின்
வடக்கிருக்கும் நூலாலை ஒன்றும், மூன்று
வட்டிக் காசுக்கடையும அவர்க்குச் சொந்தம்.
கொடிக்கப்பற் பணமுதலி குவித்து வைத்த
குவியல்களுள் இக்கோதை வைரக் குப்பை.

உண்ணுகையில் உதட்டசைவும், புரண்டு கண்கள்
    உறங்குகையில் உறுப்பசைவும் அன்றிச் சற்றும்
தன்னுடம்பை அசைக்காத முதலி யாரின்
    தாகத்தைத் தணிப்பதற்கு மூச்ச டக்கி
மண்வெட்டுத்தும் கல்லுடைத்தும், நெருப்பில் வெந்தும்
    மாட்டைப்போல் பொதிசுமந்தும், இடுப்பொ டிந்தும்
எண்ணற்ற பாட்டாளி மக்கள், தங்கள்
    இரத்தத்தை வியர்வையினைச் சிந்தி வந்தார்.

வல்லெழுத்தைச் சொல்லென்று கேட்ட தாலே
    வாத்தியார் மீதொருநாள், அச்ச மின்றிக்
கல்லெடுத்து வீசிவந்த வீரா சாமி
    காதல்மகன் அவருக்கு; வாழ்க்கைப் போரை
வெல்லுகின்ற ஆடவரின் நடுவில், ஆறும்
    விரல்போலப் பயனின்றிப் பிறப்பெ டுத்தோன்;
வல்லவர்கள் நல்லவர்கள் நடுவில், வீணாய்
    வளர்ந்திருக்கும் சாப்பாட்டு வெள்ளித் தூக்கு.

பிணக்காட்டை வறுமையினால் நிரப்பு கின்ற
    பெருமைபெற்ற இந்நாட்டில், இந்த முண்டம்
பணக்காரன் பெற்றமகன் என்று கூறும்
    பயனற்ற தகுதியின்றி. வேறுப் ஒன்றும்
தனக்கேதும் தகுதியில்லா திருந்தும், ஊரில்
    தலைகொழுத்துத் திரிந்துவந்தான்; தமிழர் நம்பும்
வினைப்பயன்கள் திட்டமிடும் பொருளா தார
    வேடிக்கைக் கிவனன்றோ எடுத்துக் காட்டு!

## வரும் போகும்
## உயிர் மூச்சு

அதிகாரிக் கோர்கணக்கும், இருட்டில் வேறோர்
அறைக்கணக்கும் வைத்திருக்கும விலாங்கு வாழ்க்கை
முதலாளி வெல்லச்சு முதலி யாரின்
மூளையென வாழ்ந்துவரும் கண்ணன் என்பான்
எதிரேதும் பேசாத கணக்கப் பிள்ளை;
எள்ளென்று சொல்வதன்முன் எண்ணெயாகும் ?
மதிநுட்பம் மிகவுடையான்; பட்டம் பெற்ற
மதிப்புடையான்; நுகத்தடிக்குக் குனியும் காளை.

நாதக்கிண் கிணித்தண்டைக் கோதை, மெல்ல
நடந்துவரும் இசையழகை நாளும் கண்ணன்
காதுக்கண் ணால்பார்ப்பான்; இவளைத் தாண்டிக்
கடந்துசென்றால் தலைநிமிர்ந்து கண்ணால் பார்ப்பான்.
மாதுக்கும் மந்தநடை பின்னும்; ஓர
மதுக்கணகள் சிறக்கணிக்கும்; இரண்டுள் ளத்தைப்
பாதிக்கும் பொருள்பொதிந்த கொக்கிப் பார்வை
பட்டுப்பட்டுத் தெறிக்கும; பதைக்கு மங்கே.

பாடுகின்ற கின்னரக்கால் அடிகள், நாளும்
    படுகின்ற நிலத்தின்மேல் நடக்கும் போது
கோடியின்பம் அவன்பெறுவான்; அவளு டம்பைக்
    குளிப்பாட்டி வருகின்ற தென்றல், தன்னை
நாடிவரும் போதெல்லாம் சிலிர்ப்பான்; அந்த
    நளினமயில் மாடியன்றோ கண்ணன் கண்கள்
தேடுகின்ற மேலுலகம்' அந்தத் தேவி
    திருவடியின் நிழலன்றோ திளைக்கும் முக்தி.

எரிகின்ற தீபத்தின் கொழுந்தைக் கண்ணால்
    இருவருமே தூண்டிவிட்டார்; காதற் பட்டம்
பெருமூச்சால் மேலெழும்ப, வலைச்சி லந்திப்
    பின்னலெண்ணம் பின்னியதில் தாமே வீழ்ந்தார்.
வரும்போகும் உயிர்மூச்சைப் போலக் கோதை
    வாசலுக்கும் உள்ளறைக்கும் நடந்த வண்ணம்
பெரும்பேதை நாள்தோறும் கழிப்பாள்; கண்ணன்
    பேச்செல்லாம் கடைக்கண்ணில் பேசித் தீர்ப்பான்.

வருமழைக்கு முன்னடைந்து பறக்கும் மேக
    வட்டாரக் கூந்தலினைக் குளித்து விட்டுச்
சிறுபவளக் காம்புவிரல் நாட்டி யத்தால்
    சிக்கறுத்துக் கொண்டிருப்பாள்; பனியில் மூழ்கி
விரியுமெழிற் புதுச்கோல மலர்க்கன் னத்தில்
    விளையாடி விளையாடி எழுந்து கீழே
சரிகின்ற பார்வையினை அனுப்பி வைப்பாள்;
    சட்டென்று வியர்வையிலே அவன் குளிப்பான்.

## கடுங்குளிரால் வாடும் காதல் நெருப்பு

ஒளிப்பளிங்குத் தண்ணீரில்
இருள்திரவம் வீழ்ந்து
ஒளிமாலை பசப்படைந்து
கற்பிழந்த நேரம்.

கொடுக்குப்போல் ஒருகோடு
நிலவாக வானில்
கொட்டுதற்குக் காத்திருந்து
கொல்லுகின்ற நேரம்.

அடைத்திருக்கும் தெருவாயில்
அழகுபெறும் நேரம்
அரும்பெல்லாம் சரமாகி
அரங்கேறும் நேரம்.

விட்டுவிட்டு விண்மலர்கள்
புறவிதழை அவிழ்த்து
விளையாடி ஒளிமணத்தை
விருந்துவைக்கும் நேரம்.

வான்வில்லின் வண்ணத்தை
ஏழிசையாய்க் கோதை
வடித்தெடுத்து மாடியிலே
வழங்குகின்ற நேரம்.

மத்தாப்புப் பூக்களைப்போல்
வண்ணவண்ணக் கருத்துக்கள்
அவள்பாட்டில் தெறித்துவிழுந்தன
அப்பூக்களைப்போல்
அவையும் சூடாக இருந்தன.

இசையாசிரியனிடம் கற்ற
உருப்படிகளைக்
கிளிப்பிள்ளைபோல் அவள்பாடவில்லை.
அவள் இதயத்தில்
கருக்கொண்டு
புல்லரிப்போடு புறப்பட்டுவந்த
புதிய பூபாளங்களைப் பாடினாள்,
வீணையை வருடும்போதும்,
நீண்ட அதன்
நரம்பு நாக்குகளைத் தடவும்போதும்
உடல் சிலிர்க்கும் ஊற்றின்பம்
அவள் மயிர்க்கால்களில் அரும்பியது.

இசையில் தன்னைக் கரைத்து
இசையே தானாக எழுந்து வந்தாள்.

பிரிக்காத செம்பொன்
பேழை நவநிதியம்,
பேழை நவநிதியம்
பிச்சைக்கு ஏங்குகிறேன்.

வாரி அமுதிறைக்கும்
வசந்த இசைக்குயிலி ;
வசந்த இசைக்குயிலி
வாய்ப்பாட்டுக் கேங்குகிறேன்,

குளித்துக் குளித்துக்
குளிர்ந்த மழைமேகம் ;
குளிர்ந்த மழைமேகம்
குளிப்பாட்ட ஏங்குகிறேன்.

ஆக்கிக் குவித்த
அறுசுவை ஆரமுது ;
அறுசுவை ஆரமுது
அரும்பசியால் வாடுகிறேன்.

கனிந்து குளிர்போக்கும்
காதற் பெருநெருப்பு ;
காதற் பெருநெருப்பு
கடுங்குளிரால் நடுங்குகிறேன்

இன்னிசைக் காந்தம் இழுக்க எழுந்து
தன்னை மறந்து நடந்தான் கண்ணன்.
மெல்லிடைக் கோதை நாளும் மிதிக்க
மல்லாந்து கிடக்கும் மார்புப் படிகளில்
ஏறினான் ; மாடியில் இசைக்குயில் மகிழ்ந்து
வாரி இறைத்த அருவியில் குளித்தான்.
இருவிழி வண்டுகள் வீணையில் மொய்க்க
சிறுவிரல் நண்டுக் கரங்கள் நடக்க
வாய்மலர் விரிந்து வண்டமிழ்த் தேனை
ஓயாது பிலிற்ற உட்கார்ந் திருக்கும
இதய நாயகியை இமைக்காமல் பார்த்தான்.

தண்டு வீணையில் அவன் நிழல் விழுந்ததும்
கெண்டை விழிகளைத் தூக்கினாள் கிளிமகள்.
துள்ளிய மெல்லிசை அறுந்தது ; பார்வையால்
அள்ளி விழுங்கினாள் அவன்பே ரழகை.
ஒருசில நொடிகள் ஊமை நாடகம்.
பின்னும் இதழ்களை மெல்ல விரித்துக்
'கண்ணா !' என்றாள் . மீதிச் செய்திகள்
என்ன என்பதைப் புரிந்து கொண்டான்.

'ஈரோட் டுக்குத் தந்தை சென்றார் ;
வீரா சாமி விடிந்துதான் வருவான்.
இனிக்கும் நினைவுடன் இன்றிரா தனிமையில்
கனிக்குலை உமக்காய்க் காத்துக் கிடக்கும்'
என்றாள் கோதை ; கண்ணன் ஏகினான்.

நாணி மென்காற்று
நடந்தது சாளரத்தில்

கண்விளக்கு மூடிக்
    கடை தூங்கக், கண்கூசும்
மின்விளக்கெல் லாமணைத்து.
    மின்னுகின்ற சின்னப்
படுக்கை அறைவிளக்கைப்
    பாவையர்கள் ஏற்ற
அடிக்கடி நாய்குரைக்க
    அவ்வூர் அடங்கியது,
மாடிமேல் கண்ணன் ;
    மடிமேல் அவன்கோதை
ஒடித் திரைவிலக்கி
    உட்புகுந்த மென்காற்று
நாணி மெதுவாய்
    நடந்தது சாளரத்தில்

தோட்டுக்குள் சீப்பாகத்
தோன்றுகின்ற வாழைப்பூக்
காட்டும் அவளுடைய
கைவிரலைப் பற்றியே
முத்தமிட்டான் கண்ணன் ;
முகம்சேர்த்தான் ; 'கண்ணே !

பணத்தோட்டப் பைங்கிளியே !
பஞ்சைநான் உன்னை
அணைக்கப் பொறுப்பானோ
உன்னப்பன் ?' என்றவளைக்
கேட்க மனங்கொண்டான் ;
வாய்திறந்து கேட்கவில்லை.

வாட்கண் அணங்குந்தன்
வாய்திறந்து 'கண்ணா !
கொட்டுகின்ற என்தந்தை
பார்வைக் கொடுக்குக்குள்
பட்டால் இறப்போம்நாம் ;
பாராமல் இக்கணமே

கண்டி பிணங்கிற்குக்
கண்மறைவாய்ச் சென்றுசூழ்
உண்டு பிழைத்திடுவோம்
உங்களுக்குச் சம்மதமா ?'
என்றவளைக் கேட்பதற்கு
எண்ணினாள்' கேட்கவில்லை.

வட்டத்திற் குண்டா
முதல்முடிவு என்பதெல்லாம் ?
ஒட்டுப் பலகை
பிரித்தால் உடையாதா ?
கட்டுப்பட் டார்காதல்
வட்டத்திற் குள்ளென்றால்
விட்டுப் பிரிதல்
மிகவெளிதா ? பெற்றோர்கள்

கண்சோர்ந்த நாளெல்லாம்
காதலர்கள் மாடியின்மேல்
பண்சேர்ந்த வீணையும்
பாட்டும்போல் ஒன்றானார்.
வீட்டுக்குள் மூடி
மறைத்தாலும் தும்மலைப்போல்
காட்டிக் கொடுப்பதுதான்
காதலுக் குள்ளகுணம்.

விரைந்தொருநாள் மாடியின்
மேல்வீரா சாமி
மறைந்திருந்து கண்டான் ;
மடமயிலை அக்கண்ணன்
ஆடை களைந்தே,
அவளுடம்பைக் கூந்தலினால்
மூடி மறைத்து
விளையாடிக் கொண்டிருந்தான்

ஆவ லுடன்சமைத்து
ஆறவைத்த நல்லுணவைக்
காவல்நாய் கவ்வுவதைக்
கண்ட அவளண்ணன்
கொன்று குவிக்கக்
கொலைவாளைத் தூக்கினான்;

நின்றான்; சிறிது
நிதானித்தான்; தந்தையிடம்
'பேரேட்டுப் பூச்சியென்று
பேசா திருந்துவிட்டோம்;
தேரோட்டக் காதல்
நடத்துகிறான் கோதையிடம்!
சேல்விழியாள் வேலப்பர்
செல்வமகள் என்றறிந்தும்
வேல்முனையில் ஏறி
விளையாட்டாய்க் குந்திவிட்டான்!

தாயில்லாப் பெண்ணென்று
தட்டி வளர்க்காமல்
நீரன்றோ வீட்டில்
நெருப்பை வளர்த்துவிட்டீர்!'
என்று குமுறினான்;
இதைக்கேட்ட வேலப்பர்
'நன்று மகனே!
நடுங்காதே! நாளை

கணக்கன் கணக்கை
முடித்துவிடு ; சற்றும்
சுணக்க மினிவேண்டாம்
சொன்னபடி செய்'என்ருர்.

தந்தை மகனிருவர்
தாங்காப் பெருந்துயரைச்
சிந்தையிலே தேக்கிச்
சிறுசலனம் இன்றிப்
பெருநெருப்பை மூடிவைத்துப்
பேசாமல் தூங்கும்
எரிமலையைப் போலிருந்தார்
இன்று

## இடறிவிட்ட
## வறடிகல் பள்ளம்

பண்ணிசைப் பாவலன் ஞானசம் பந்தனும்
வண்ணச் சரபமும் அருணகிரி நாதனும்
கண்ணும் காலும் இன்றியிச் செந்தமிழ்
மண்ணை அளந்த இரட்டைப் புலவரும்
பாடிய பழம்பதி திருச்செங் கோட்டில்
விசாகப் பெருவிழா மிகப்பெருந் திருவிழா
தவிலிடி முழக்கம் ஒலிக்கப் பத்துநாள்
அமளி துமளிப் படுமித் திருநகர்.
சைவத் திருமுறை விழாவும், கண்ணகி
ஐயை விழாவும் அப்பொழுது நடக்கும்.
ஊரும் பேரூர்; இவ்வூர்த் தேரோ
ஆரூர்த் தேருக் கடுத்த பெருந்தேர்,

காலை விடிந்ததும் கடபுடா ஒலியுடன்
ஆனைமேல் ஆண்டவன் ஏறி யிருக்கச்
சேனை பதிபோல் செல்லுவார் குருக்கள்.

பெருந்தேர் விழாவால் இவ்வூர் சிலநாள்
விருந்தூர் ஆகும்; வேளாளப் பெண்டிர்
கொத்து நகையுடன் கொண்டைப் பூவுடன்
சத்தச் சிரிப்புடன் சாரி சாரியாய்ச்
சிற்றூரில் இருந்து முற்றுகை போடுவர்.
அடிக்கடி கேட்கும் முதலிமார் வீட்டுச்
சடக்கொலித் தறித்தொழில் சிலநாள் தூங்கும்.
மேயும் சாமி மாடும், குவித்தமாங்
காயும் ஈயும் எங்கும் தென்படும்.

மலைமேல் இருந்து மங்கை பங்கன்
நகர்க்கெழுந் தருளும் நான்காம் திருவிழா
மிகச்சிறப் பாக நடந்துகொண் டிருந்தது
சிரிப்பு நெருப்பு வாண வேடிக்கை
இருட்டில் பகலை எய்துகொண் டிருந்தது.
ஆடு துறைக்குழல் மந்திரக் காரன்
தோடி மேகத்தை ஊர்மேல் ஏவி
நாதசுர மழையால் நனைத்துக்கொண் டிருந்தான்.

கண்ணனும் வீரா சாமியும், மலைமேல்
இன்னும் இருந்தனர்; இறைவனைத் தொழுதனர்.
உச்சிப் பிள்ளையார் கோவிலை அடைந்தனர்.
அச்சம யத்தில் மக்கள் கூட்டம்
புற்றில் இருந்துகீழ் இறங்கும் எறும்புபோல்
சுற்றம் சூழ இறங்கிகொண் டிருந்தது
மலைமேல் மயான அமைதி சூழ்ந்தது.

பிள்ளையார் கோயிலுக் கருகில் இருக்கும்
கல்லை ஊரார் 'வறடிகல்' என்பர்.
பிள்ளை இல்லா தவரும், தமக்கோர்
கிள்ளையைத் தேடி மணக்கா தவரும்
வறடி கல்லைச் சுற்றுவர், எண்ணம்
விரைவில் முடியும் என்பத ஞலே.

"கண்ணு! நமக்கோ கரும்புத் திருமணம்
இன்னும் ஏனே நடைபெற வில்லை.
எதிரில் இருக்குமிக் கல்லைச் சுற்று
வதஞல் கோதையர் மணப்பரோ நம்மை?"
என்று கேட்டான் வீரா சாமி
கோதை என்னும் கொஞ்சும் சதங்கை
காதில் விழுந்ததும் கண்ணன் எழுந்தான்;
ஆவல் அவனை உந்த விரைந்து
தாவினுன் வறடி கல்லின் பக்கம்
ஒட்டில் காலை வைத்தான்; பின்ஞல்
எட்டி உதைத்தான் வீரா சாமி.

ஆழ்ந்த செங்குத்து அடிமுடிப் பள்ளத்தில்
வீழ்ந்தான் கண்ணன்; விழுகின்ற போது
கோதை என்னும் கூப்பா டன்றி
வேறெதும் அங்கு விழவில்லை காதிலே!

## நனவை அறுக்கும்
## நடுக்கக் கனவு

காலையிலே முணுமுணுக்கும் இசைப்பாட் டோடு
    கட்டழகி கண்மலர்ந்தாள் ; கலைந்தி ருந்த
சேலையினைச் சரிசெய்தாள் ; நிலைக்கண் ணாடி
    சிரிக்குமவள் முகப்பளிங்கில் தன்னைப் பார்க்கக்
கோலமயில் போலெதிரில் நின்றாள் ; முன்னால்
    குறும்புசெயும் கூந்தலினை ஒழுங்கு செய்தாள் ;
வாலிபத்தேர் ஏனின்னும் காணோம் என்று
    வரிவிழியில் வினாக்குறியை நிறுத்தி வைத்தாள்.

'நாலிராயி ரத்தோடு சரக்கு வாங்க
    நம்கணக்கப் பிள்ளையினை விடியற் காலை
மேலூருக் கனுப்பிவைத்தேன் ; தஞ்சை சென்று
    மேலகரம் பிள்ளையினைப் பார்த்து விட்டு
நாலைந்து நாட்கழித்து வருவான்' என்று
    நடைவீட்டில் தந்தையிடம் அண்ணன் சொன்ன
போலியுரை அவள்கேட்டாள் ; நத்தை நாட்கள்
    போகுமா சீக்கிரத்தில் என்று நைந்தாள்.

ஐந்தோடு பத்துநாள் ஆன பின்னும்
அழகரசன் வரக்காணேம் ; மாடி அன்னம்
சிந்தையினைச் சுடுகின்ற நெருப்புத் துன்பச்
சிதையின்மேல் துடிதுடித்தாள்; பணம்போச் சென்று
தந்தைமகன் இருவருமே புனுகு பூனைத்
தவிப்போடு கூடத்தில் திரிந்தார்; 'கண்ணன்
இந்தவிதம் செய்வானென் றெண்ண வில்லை'
என்றுசொன்ஞர் ஊர்மக்கள் இடத்தில் எல்லாம்.

அரக்காம்பல் திருமேனி நறுநீர் ஆடி
ஆடைகட்டும் நேரத்தில், காலின் மீது
கரப்பான்வந் தேறுவது போலக் கூசிக்
கணநேரம் மெய்சிலிர்த்தாள்; தனது காதற்
சறுக்குவிளை யாட்டுக்கு நொந்தாள்; நெஞ்சம்
சவப்பெட்டி போலானுள்; வைரம் கூடத்
துருப்பிடிக்கும் என்றெண்ண வில்லை யென்று
தூங்காமல் துயரப்போர் நடத்த லானுள்

உடம்புக்கால் புழுக்களினைக் கொதிக்கும் வெய்யில்
உருண்டபக்கம் சுடுவதைப்போல், கோதை மேனி
படும்படுக்கை இடமெல்லாம் கொதிக்கச் சோர்ந்து
பதைப்போடு கண்ணயர்ந்தாள் ; இடையில் தன்னை
நடுங்கவைக்கும் கனவுக்குள் ஆழ்ந்தாள் ; பார்க்கும்
நயனவிழிப் போதிரண்டும் உறங்க, புனல்
படம்போல விரிகின்ற கனவுக் காட்சி
பார்ப்பதற்குப் புதியவிழி ஒன்று பெற்ருள்.

இருட்டுக்குள் கழுவுகின்ற புகைப்ப டம்போல்
எதிரினிலே ஒருருவம் நிற்கக் கோதை
விருட்டென்று பதைத்தெழுந்தாள் ; மேனி யெங்கும்
விரிந்திருக்கும் செங்குருதிக் காயம் ; கண்ணீர்ப்
பரப்பாலே பந்தலிட்ட விழிகள் ; ஏசு
பாவிகளின் சிலுவையிலே தொங்கும் காட்சி
இருப்பதுபோல் இருக்கின்ற இரக்கத் தோற்றம் ;
இளையமயில் கண்ணாவென் றலற லானாள்.

தசைப்பிண்டம் செங்குருதி ஓட்டம்; உன்மேல்
சஞ்சரிக்கும் புல்லரிப்புப் பார்வை, யாவும்
கசக்கிவிட்டு நிற்கின்ற ஆவி மேகம்
கண்ணன்தான் ; கனிப்பேச்சல் உன்வாய் வண்டு
வசப்படுத்தி மொய்க்கமுடி யாமல், காலன்
வரைந்தபுகைப் பூ'என்று, கிழிந்து போன
இசைப்பெட்டிக் குரலாலே கண்ணன் சொன்னான் ;
இருவிழியால் முத்துக்கள் உதிர்த்தாள் கோதை.

உச்சிமலை மீதிருந்து வீராசாமி
உருட்டியெனைக் கொன்றுவிட்டான் ; பந்த லிட்ட
பச்சைமரக் காட்டுக்கு நடுவே, நாகர்
பள்ளத்திற் கருகென்னைப் புதைத்தான் ; காட்டுப்
பிச்சிப்பூக் கொடிபடரக் கவிந்த கொன்றைப்
பெரியமரம் குடைப்பிடிக்கப், பாடும் வண்டுச்
சச்சரவுச் சுனைப்பூக்கள் கண்விழிக்கும்
சரிவினிலே துணையின்றி உறங்கு கின்றேன்

குலையீந்து போற்செழித்துச் சரிந்த உன்றன்
கூந்தலன்றோ எனைப்பிணித்த பாசம்; அந்த
அலைமீது புரள்வதென்றால் இன்னும் கூட
அடுத்தடுத்துப் பத்துமுறை சாவேன்; அந்தத்
தலைவிழுதை என்மீதில் இறக்கிக் கண்ணீர்த்
தாரைகளால் குளிப்பாட்ட என்னைத் தேடிச்
சிலையழகி ஒருமுறைநீ வந்தால் போதும்;
செத்ததற்கு நான்வருந்த மாட்டேன்' என்றான்.

கருங்குழல்
எரிந்த பின்னர்
கரியேது?

பனித்தநீர் நனைத்த செங்கண்
பட்டிதழ் விரித்தாள்; காம்பு
நுனித்தளிர் விரலால் கண்ணீர்
நோக்காட்டைச் சுண்டி விட்டாள்;
கனித்தமிழ்க் கண்ணன் வந்த
கனவுவாள் நெஞ்சக் கூட்டைத்
தனித்தனித் துண்டாய் வெட்டித்
தணலிலே போட நொந்தாள்

கருங்குழல் நாக பந்தக்
கவிதையைக் கலைத்தாள்; காந்தள்
விரும்பிடும் கையால் நெற்றி
விளக்கினை அணைத்தாள்; மார்பில்
அரும்பிடும் பார மெல்லாம்
யார்க்கென வெறுத்துத் தேகக்
கரும்பினை ஒடித்துத் தேக்குக்
கட்டிலின் மீது போட்டாள்.

அணைக்கின்ற போதில் எல்லாம்
அருவியில் குளிக்கும் இன்ப
நினைப்பினைக் கொடுக்கும் கண்ணன்
நெடுமார்பும், இறுகப் புல்லும்
பணைத்தோளும் மலைமேல் என்ன
பாடுபட் டிருக்கும் என்று
கணப்போது நினைப்பாள்; கண்ணீர்க்
கடலிலே தெப்ப மாவாள்.

தந்தையோ ஊரில் இல்லை;
தறுதலை வீரா சாமி
அந்தியில் வருவான் என்ப
தறிந்ததும் கோதை உள்ளம்
பந்தயக் குதிரை யாகப்
பார்வதிப் பணிச்சி யோடு
சந்தன மரங்கள் சூழ்ந்த
சாரலை நோக்கிச் சென்றாள்.

கடும்புதர் விலக்கிக் காவிக்
கால்களில் முட்கள் தைக்க
உடும்புபோல் சரிவில் ஏறி
உட்காந்து நடந்து, பூத்த
தடஞ்சுனை அருகில் காதல்
தலைவனின் படுக்கை கண்டாள்;
கொடுந்தொழிற் குண்டு பாய்ந்த
கூந்தல்வால் மயில்போல் வீழ்ந்தாள்,

"கட்டிலில் எனது மார்பில்
கனிந்தவென் கனவே! பூமித்
தொட்டில் எனைம றந்து
தூக்கமா? கண்ணே! என்று
நெட்டுயிர்ப் போட லைப்பீர்!
நெருக்குவீர்! என்னி டுப்பைத்
தொட்டணைக் கின்ற அந்தத்
துடுக்குக்கை எங்கே காணோம்?

"அடிமுதல் முடிவ ரைக்கும்
அளக்கின்ற கண்க ளெங்கே?
முடிமீதும் முகத்தின் மீதும்
மொய்க்கின்ற இதழ்கள் எங்கே?
கொடிபோல நான் படுக்கும்
கோபுரத் தோள்க ளெங்கே?
வடிகின்ற செந்த மிழ்த்தேன்
வார்த்தைவாய் வீணை யெங்கே?

"நெருங்கிய காதல் வாழ்க்கை
நிலையற்ற வான வில்போல்
வெறுங்கன வான பின்னர்
வேறென்ன எனக்குத் தேவை?
கருங்குழல் எரிந்த பின்னர்
கரியேது? சாம்ப லேது?
வருங்காலம் என்ப தெல்லாம்
வாழ்வினில் இனிமேல் ஏது?

"குளிர்நிழல் கவிக்கும் பச்சைக்
கூடார மரமே! ஒடித்
தளிர்க்கரத் தால் மரத்தைத்
தழுவிடும் கொடியே! என்றன்
அழகனும் நானும் உம்போல்
ஆருயிர் தளிர்க்கக் கட்டித்
தழுவினேம் என்ப தல்லால்
தவறென்ன செய்து விட்டோம்?

"குளிர்சுனை நடுவில் பூத்த
குமரியே! குவளைப் பூவிற்
இளைப்பாறு கின்ற வண்டே!
என்மலர் மார்பின் மீது
களைப்பினால் உறங்கு வாரென்
காதலர் என்ப தல்லால்
பிழைப்பென்ன செய்தார் இந்தப்
பெருந்துயர் அடைவ தற்கே?"

என்று கதறிய இளந்தளிர்க் கோதை
நின்றாள்; விழுந்தாள்; நெருக்கும் வறுமையால்
முன்பு புதைத்த முடிச்சுப் புதையலைப்
பின்புவந் தாவலாய்ப் பறிப்பவர் போல,
முன்றிலில் அமர்ந்து முல்லை தொடுத்துக்
கன்றிய அல்லிக் கரங்களால், காதலன்
படுத்துக் கிடக்கும் படுக்கையைக் கலைத்தாள்.

கண்ணு ! கண்ணு ! எழுந்துவா என்று
பண்ணொ டழுது பாடி எழுப்பினுள்
எழாத தூக்கத்தில் இருக்குமவள் கண்ணன்
அழாதே என்ரு ஆறுதல் கூறுவான் ?

சதைச்சுவை மேனி அழுகிப், பிளந்த
விதைச்சுரை போலப் பற்கள் இளித்தன.
கலந்துற வாடிய காந்த விழிகள்
பிளந்த முட்டைபோலப் உருவம் சிதைந்தன.
அடிக்கடி அவள்விழிப் பார்வையை அழகால்
தடுத்து நிறுத்தும் தழைத்த அவன்முடி
இன்றும் கோதையின் ஏக்கப் பார்வையைக்
கொன்று சுருண்ட கனவாய் எழுந்தது.
கையால் கரியவக் கனவைக் கோதினுள் ;
கனவு கலைந்தது ; நினைவில் குதித்ததும்
கையில் இருந்த கத்தியால் அவன்தலை
கொய்து பட்டுக் குட்டையில் மறைத்தாள்
அகத்தில் துருத்தி அழுகை புறப்பட
முகத்தில் சேர்த்து முத்தமழை பொழிந்தாள்.

## உடைந்த புல்லாங்குழல்

இடைக்கொடி மாளிகையை
ஏந்தும் பவள
நடைத்தூண் நடுங்க
நடந்துவந்தாள் ; மாடியிலே
அஞ்சி ஒளிந்தாள் ;
அரும்பிரண்டும் போதாகிக்
கொஞ்சும் வசந்தம்
குலுங்கும் அவள்மார்பில்
கட்டிப் புதைத்துக்
களித்த அவன்தலையைத்
தொட்டிக்குள் வைத்துப்
புதைத்தாள் ; கிளிப்பேச்சுப்
பண்ணில் குளிப்பாட்டிப்
பார்த்த அவன்தலையை
மண்ணில் புதைத்து
மறைத்தாள் ;அத் தொட்டியிலோர்

சின்னச் செடிநாட்டாள் ;
    சீராட்டி நாள்தோறும்
கன்னத்தில் சேர்த்துக்
    கருமணிபோல் காத்துவந்தாள்.

"ஆவி தளிர்க்க
    அரும்பும் மலர்ச்செடியே !
பாவியெனக் குன்னையன்றிப்
    பாரில் துணையில்லை.
என்னுடம்பும் என்னுயிரும்
    என்றன் உயிர்த்துடிப்பும்
உன்னையன்றி வேறில்லை ;
    உண்மையாய்ச் சொல்லுகிறேன்.
உன்மூச் சறுந்துவிட்டால்
    அக்கணமே இக்கோதை
தன்மூச் சறுந்துவிடும்
    சற்றுமிதில் ஐயமில்லை"

என்று புலம்பினாள் ;
    எண்ணா தனவெண்ணி
நின்று நடுங்கினாள் ;
    நெற்றிக்கு மேல்திரண்ட
மேகக் கருங்கூந்தல்
    மேலே பரப்பிவைத்துப்
பூகம்பப் பேரழுகை
    பொங்கிவரக் கண்ணீர்த்

தாரை மழைபொழிந்தாள் ;
    தன்மார்பில் அச்செடியை
ஆரத் தழுவி
    அணைத்துத் துடித்தழுதாள் ;
தீச்சுடர் போலத்
    தளிர்துக் குருதியைப்போல்
பூச்செடி மேனியெங்கும்
    பூத்துக் குலுங்கியது.

ஆணிவே ரைக்கறையான்
    அரிக்கக் கொடியொன்று
மேனி வதங்கியே
    மெல்லவுயிர் சோர்வதுபோல்
நாளாக நாளாகக்
    கோதை ஒளியிழந்தாள் ;
வேளைதொறும் உண்ண
    விருப்பமவள் கொள்வதில்லை.

பின்னி முடிக்காமல்
    பேச்சுத்தேன் சொட்டாமல்
கண்ணுக்கு மையெழுதிக்
    காட்டாமல், எப்போதும்
தொட்டிக் கருகிலே
    தூங்குவதைப் பெற்றெடுத்த
எட்டிக்காய்த் தந்தை
    எரிவிழியால் பார்த்துவிட்டான்.

அடைகாத்த கோதை
அகன்ற சிறிய
இடைவேளை நேரத்தை
எதிர்பார்த்துக் காத்திருந்த
தந்தையும் பொல்லாத்
தனயனும் மாடிக்குள்
வந்து புகுந்தார் ;
வதங்குமவள் ஆவியினை
நட்டுப் பகலிரவாய்
நாள்தோறும் காத்துவந்த
தொட்டியை நெஞ்சத்
துடிப்பையவர் கொண்டுசென்றார்.

எட்டித் தொலைவில்
எவரு மறியாமல்
தொட்டியைப் போட்டுடைத்தார் ;
கண்ணன் முடித்தலையும்
பட்டுக்கைக் குட்டையும்
பார்த்தவரை அச்சுறுத்த
நட்டமரம் ஆனார் ;
நடுக்கத்தால் வேலப்பர்
அந்தக் கணமே
அதிர்ச்சியினால் செத்துவிட்டார்.
எந்தவிதம் தப்பிப்
பிழைப்ப தெனநடுங்கி
எங்கோ மறைந்தான்
கொலைகாரன் ; கோதையோ

பொங்கி அணைந்து
    புதையும் நெருப்பானாள் ;
கட்டழகுக் கண்களிலே
    கண்ணீர் அணைகட்டித்
தொட்டியெங்கே ? தொட்டியெங்கே ?
    என்று புலம்பித்
தெருவோரம் நின்று
    திகைப்போடு கேட்டாள்
வருவாரைப் போவாரைப்
    பார்த்து.

கண்ணீர்த் தவங்கள்
கடைப்பிடித்து நான்வளர்த்த
பன்னீர் வரங்களைப்
பறித்தெடுத்துச் சென்றவரார் ?

அரும்பி மலராத
ஆசையை எரிப்பதற்கு
விரும்பி நான்வளர்த்த
வேள்வியை அணைத்தவரார் ?

பதைப்பு நிலத்தில்
பாவையென்னை எருவாக்கி
விதைத்தமலர்த் தோட்டத்தை
வெடுக்கென்று பறித்தவரார் ?

ஒழுகும் என்னிதய
ஊற்றுப்புல் லாங்குழலில்
வழிகின்ற வேதனை
வரிப்பாட்டைத் தடுத்தவரார் ?

வெப்பு நோய்க்காட்டில்
விளைந்த என்னிதயக்
கொப்புளம் புதுப்பூக்
குடலையைக் கொண்டவரார் ?

கண்ணீர்த் தவங்கள்
கடைப்பிடித்து...
கடைப்பிடித்து...
(சிரிக்கிறாள்)

# பனித்துளிகள்

பொன்பூத் திருக்கும் பூம்புதர் தோறும்
வாய்வீணை மீட்டி வறுமையைக் காட்டி
ஏழை வண்டுகள் இரந்துகொண் டிருந்தன.
இலையுதிர் காலக் கல்லறை மீது
வசந்தப் புற்கள் மறுபிறப் பெடுத்தன
நழுவிய ஆடைக்கு நாணிய காடுகள்
இளந்தளிர் ஆடையை எடுத்து விரித்து
மூடாத மேனியை மூட முனைந்தன.
தென்றல் மூட்டிய கிசுகிசுப் பாலே
குமரி மரங்கள் குலுங்கிச் சிரித்தன.
புதிய வருவாய்ப் பூம்புனற் காவிரி
பழகிய இலக்கணப் பாதையில் ஓடிப்
பழைய பாட்டையே பாடிக்கொண் டிருந்தது.
மரங்களில் வாழும் மரபுக் குயில்கள்
புதுக்கவி மாலை புனைந்துகொண் டிருந்தன.

மாதவிக் கொடியை மறுமணம் புரிந்த
போதவிழ் புன்னை மரத்தி னடியில்
இருந்தவோர் அழகிய எழுத்தாணிக் கவிஞன்
கருத்தில் குவிந்த கற்பனைச் சரக்கை
எழுத்துவா கனத்தில் ஏற்றிக்கொண் டிருந்தான்
பிசைந்த சுவைத்தேன் வரிகளைப் பின்னர்
இசைநயம் பொருந்த உரக்கப் பாடினன்.

*பொழுது மறைந்ததடி!*
*போடுகின்ற நீர்விதைபோல்*
*விழுகின்ற பனித்துளி*
*புல்லின்மேல் விழுந்ததடி!*
*பரிதி முளைத்தால்*
*பனித்துளிகள் செத்துவிடும்,*
*பரிதிமுளைப் பதற்குள்*
*பாவையே வாராயோ!*

*வெள்ளி நிலவு*
*விண்ணில் எழுந்ததடி!*
*அல்லிக் குளத்தெழுந்து*
*அகவிதழை அவிழ்த்ததடி!*
*ஆதவன் வந்தால்*
*அல்லிமுகம் வாடிவிடும்*
*ஆதவன் வருவதற்குள்*
*ஆருயிரே வாராயோ!*

வானம் இருண்டதடி!
வாரிஇறைத்து வைத்து
மீனின் குடும்பம்
மேலே தெரியுதடி!
வெய்யோன் எழுந்தால்
விண்மீன்கள் செத்துவிடும்
வெய்யோன் எழுவதற்குள்
தையலே வாராயோ!

இசைக்கனவைக் கலைத்தெழுந்தான் கவிஞன்; இந்த
இன்பதுன்ப நனவுலகிற் கிறங்கி வந்தான்
அசைச்சீர்கள் தழுவாமல் நடந்து செல்லும்
அழகியதோர் காப்பியத்தை எதிரில் கண்டான்.
'தசைக்கோவைக் காப்பியமே! நீயார் என்று
தமிழ்க்கவிஞன் வியப்போடு கேட்டான்; எட்டுத்
திசைதோறும் தன்புகழை நிறுத்தி வைத்த
தேர்வேந்தன் திருமகள்நான்' என்றாள் அன்னம்.

'இவ்வுலகின் இடுப்பொடியப் படைந டத்தி
ஈழத்தை வெற்றிகொண்ட ராச ராசன்
எவ்வுலகும் வியப்படையத் தஞ்சா வூரில்
எழுப்பிவைத்த உளிப்பாட்டை அறிவேன்; சோழர்
கொவ்வையிதழ்க் குலக்கொடியே! குன்ற யானைக்
குலோத்துங்கன் இப்படியோர் சிற்பக் கோயில்
எவ்விதமாய்ச் சிலைப்பளிங்கால் எடுத்தான்? கூறாய்!'
என்றவளை வியப்போடு கவிஞன் கேட்டான்.

'கற்சிலைகள் எனக்கூறும் பேசா ஊமைக்
கனவுகளைச் சிறைப்படுத்திச், சோழ மன்னர்
கற்கோயில் பலவெடுத்தார் ; அவைகள் எல்லாம்
கருக்கொண்ட விருத்தவரிக் கம்ப நாடன்
சொற்கோயிற் கொப்பாமோ ? அடிகள் தோறும்
சுவைபழுத்த அக்கோயில், காலம் வென்று
நிற்கின்ற கலைக்கோயில் ; சோழர் கோயில்
நிலையற்ற கோயிலென்று' நங்கை சொன்னாள்.

நெடிலடிபோல் தன்காலை மடித்து வைத்து
நேரிழையாள் அவனருகில் அமர்ந்தாள் ; சோழர்
முடிமணியே ! எனவழைத்தான். பிரித்தெ டுக்க
முடியாத பார்வையினால் முடிந்து கொண்டார்.
கொடுமுடியில் கூடுகட்டும் ஈக்கள் போலக்
கோமகளும் பாட்டுக்கோன் மகனும், தங்கள்
அடிமனத்தில் தேனடைகள் அடுக்க டுக்காய்
ஆயிரங்கள் தித்திக்க நிரப்ப லானார்.

அலையலையாய் இறங்கிவரும் அருவிக் கூந்தல்
ஆற்றினிலே குளித்தெழுந்தான் கவிஞன் ; பாயும்
கொலைவேற்கண் விழுப்புண்கள் தனது மார்பில்
கோடிபெற்றுப் பெருவீரன் ஆனான் ; சோழன்
கலைக்காப்பி யத்திற்குக் கம்பன் அம்பி
காபதியோர் விருத்தியுரை இன்று செய்தான்.
நிலையுண்டா இழுக்கின்ற நீரில் ? சொந்த
நினைப்பின்றி இருவருமே மிதந்து சென்றார்.

உள்ளங்கள் ஓரிரண்டும் கரைய, இன்ப
ஊற்றெடுக்க காதலர்கள் இரண்டு பேரும்
வெள்ளங்கள் கலப்பதுபோல் கலந்து, காதல்
விரிகடலில் சங்கமித்தார்; பொருள பொதிந்த
கள்ளங்கள் பார்வையிலே வளர்த்தார்; கண்ணில்
கனவுகளைத் தாலாட்டி வளர்த்தார்; வானம்
பிள்ளைநிலா வளர்ப்பதுபோல், இரண்டு பேரும்
பேரரசன் அரண்மனைக்குள் அலர் வளர்த்தார்.

கைவைத்தோர் எரிமலையை மூடி விட்டால்
கக்காமல் இருந்திடுமா அனற்கு ழம்பை?
மைவைத்த கண்ணுடையார் கள்ளக் காதல்
மறைத்தாலும் தெரியாமல் போவ தில்லை?
பைவைத்த படவரவைப் போன்ற மன்னன்
பதைத்தெழுந்தான்; பாய்கின்ற வேங்கை யானான்.
கைவைத்துப் பறித்தெடுத்துக் காதற் பூவைக்
காலாலே தேய்ப்பதற்குத் துணிந்து விட்டான்.

கோட்டைமதிற் சுவர்கடந்து படர்ந்த சோழர்
குலக்கொடியை அரண்மனைக்குள் காவல் வைத்தான்.
'ஈட்டியெங்கே! எழுத்தாணி யெங்கே! சோழர்
இன்பத்துப் பாலெங்கே! சுவடி யேந்தும்
பாட்டுப்பிச் சைச்காரக் கவிஞன் எங்கே!
பருவைர மெங்கே! கூ ழாங்கல் எங்கே!
தீட்டியகூர் வாள்மணந்தான் நடக்கும்; காதற்
திருடர்களுக்' கென்றுகுலோத் துங்கன் சொன்னான்.

கருக்கரிவாள் பிறைநிலவு
வானத்தில் தொங்கிக்
கொண்டிருந்தது. அப்போது
பெடையைப் பிரிந்த தமிழ்க்குயில்
தனியே கூவுகிறது.

சிரிக்கும் சிலையே! தேடியிங்கு வாராதே!
தேடிநீ வந்தால் தேனே! என் உள்ளத்தில்
கருக்கொண்ட காதற் கற்பனைகள் கலைந்துவிடும்
கற்பனைகள் கலைந்தாலும் கவலையில்லை; உனைப்பெற்ற
விற்புருவ வேற்கண் அன்னையென்ன சொல்வாளோ?
ஆனாலும் நீயென்றன் ஆருயிரில் கலந்துவிட்டாய்!

தென்றல் இளங்காற்றே தேடியிங்கு வாராதே!
தேடிநீ வந்தால் திருவிளக்கே! என்னுடைய
கண்கள் வளர்க்கும் கனவு கலைந்துவிடும்
கனவுகலைந் தாலும் கவலையில்லை; உனைப்பெற்ற
தினவுத்தோள் தந்தை சீறியென்ன சொல்வனோ?
ஆனாலும் நீயென்றன் ஆருயிரில் கலந்துவிட்டாய்!

பாட்டுக் குரல்கேட்டு
ஆட்டமயில் ஓடிவந்தாள்

கொட்டும் அனற்குழம்புக்
கூவலைச் செவிமடுத்துச்
சிட்டுப் பறந்துவந்தாள்;
செய்ய தமிழ்க்கவிஞன்
பொற்பதக்க மார்பில்
புதுவைரம் போற்பதிந்தாள்

சிற்ப ரதியைச்
சேர்த்தணைத்து, முன்னால்
இழந்த பெருந்தனத்தை
எய்திய ஏழையைப்போல்
பழந்தமிழ்ச் சங்கப்
பாட்டுத் தொகையுடம்பை
உச்சி முதலாய்
உள்ளங்கால் ஈறாக
இச்சை யுடன்தடவி
இன்ப சுகங்கண்டான்.

கண்கள் எனுஞ்சிவந்த
காளவாய் கொப்பளித்த
வெந்நீர் அருவியை
வேர்ப்பலா முத்தத்தால்
கட்டி அணையிட்டான் ;
கார்குழல் காட்டுக்குள்
எட்டி நுழைந்தேன்
இளைப்பாறி வீற்றிருந்தான்.
ஆகம் பொருத்தி
ஞானியர்போல் காதலர்கள்
ஏக நிலையில்
இருந்தார் தமையிழந்து !
சுற்றி யிருந்த
சோலைகளும் மாமரமும்
நெற்றியில் பொட்டு
நிலவணிந்த மாமலையும்

விண்ணும் உடுக்களும்
விரிந்து பரந்தவிந்த
மண்ணும் விலங்கும்
மறைந்து கரைந்துருகி
ஆவி நிலையாகி
அன்புப் பெருவெளியாய்
மேவி யிருக்க
இருவரையும் வெடுக்கென்று
தாவிப் பறித்ததோர் கை !

வெடிக்காத தென்னையிளம் பாளை போன்ற
வீரவாள் மீதிலொரு கையும், துள்ளித்
துடிக்கின்ற மீசைவாள் மீதோர் கையும்
தொட்டவண்ணம் நின்றிருந்தான் சோழன்; கையை
நொடித்தவுடன் அடுப்புக்கண் கொலைஞர் பாய்ந்தார்.
நுதல்வியர்த்த இளங்கவியைப் பருந்து பற்றி
அடித்துக்கொண் டோடுவது போலச் சென்றார் ;
ஆணிமுத்தைப் பெட்டகத்துள் அடைத்து வைத்தார்.

'இனிமேலென் வானத்தைக் கவிதை பாடும்
இளையநிலா அளக்காது ; சிதைந்த என்றன்
பனிமலரில் வீணைவண்டு சுற்றி வந்து
பாட்டரங்கம் நடத்தாது ; மூக்கு மூச்சும்
இனியெனக்குச் சீறுகின்ற பாம்பே ! ஒட்டி
இருக்கின்ற உயிருடலம் தீயும் பஞ்சும் !
தனிமையிலே எனக்கேது வாழ்க்கை !' என்று
தரைமீதுய்த் துடித்தழுதாள் தஞ்சைத் தையல்.

அலைவாயில் பிறக்காத அமுத வெண்பா
அதிகாரி புகழேந்தி ஓடி வந்து
கொலைவாளின் குறுக்காகப் பாய்ந்தான்; 'சைவக்
குலோத்துங்கா கொலைத்தொழிலை நிறுத்தி வைப்பாய்
கலைவேந்தன் பெருங்கம்பன் சபிப்பான்; சோழர்
கால்வழியே அறுந்துவிடும்; கவிதை நாற்றுத்
தலையுடலில் வாழட்டும்; கம்பன் பிள்ளை
தமிழுலகை வாழவைப்பான்' எனத் தடுத்தான்

'படைநடத்தும் மன்னவன்நீ; கம்பன் பிள்ளை
பாநடத்தும் இளவரசன்; கவிதை வீரன்.
தொடைமணக்கும் மார்பழகுத் தோகை. அந்தத்
தோள்மணக்கும் இளங்கவியைக் கைப்பி டிக்கத்
தடையென்ன போர்மன்னு! தந்தி யாழைத்
தமிழ்விரல்கள் தடவட்டும்; தடுக்க வேண்டாம்.
மடைநடக்கும் வாய்க்கால்கள் சூழும் தஞ்சை
மாநகரில் மணமுடிப்பாய்' என்று சொன்னான்.

'கோவையெனும் நானூறு குமரிப் பாடல்
குழறிவைத்துப் பீற்றுகின்ற குட்டிக் கம்பன்
நாவொழுக ஒருநூறு பக்திப் பாடல்
நதித்தமிழில் கொடுக்கட்டும்; பருவ நெஞ்சை
நீவுகின்ற போதைச்சொல் தன்க ழுத்தை
நீட்டுவது கூடாது; பாடி விட்டால்
தாவுகின்ற பொன்மானைத் தருவேன்' என்று
தார்வேந்தன் தமிழ்வேந்த னிடத்தில் சொன்னான்,

மான்குட்டி துள்ளுதற்கும், சிங்கக் குட்டி
மதகரியின் மத்தகத்தைப் பிளப்ப தற்கும்
மீன்எட்டிக் குதிப்பதற்கும் பிறழு தற்கும்
மெல்லுதடு சுவைத்திட்டால் இனிப்ப தற்கும்
கான்மயிலி பசுந்தோகை விரிப்ப தற்கும்
கட்டளைகள் பெற்றாற்போல் கம்பன் பிள்ளை
பாநூறு பாடுவதற் காணை பெற்றான்
பாடல்களின் அணிவகுப்பை நடத்தி வைத்தான்.

'மெய்யுருக்கும் வாசகமோ! மூவர் பாட்டோ!
மிதக்குமிசை மேகவண்ணக் கண்ணன் நெஞ்சைக்
கொய்வதற்குக் கசிந்துருகி ஆழ்வா ரெல்லாம்
கொட்டியகண் ணீரருவிப் பாட்டோ!' என்றே
ஐயுற்றார் புலவரெலாம்; அங்க மெல்லாம்
ஆனந்தக் கண்ணானார்; இதற்கு முன்னம்
எய்தாத இன்பநிலை எய்தி நின்றார்;
இகத்திலே பரங்கண்டோம்! கண்டோம்! என்றார்

பண்டார வண்டுகளின் பாட்டுச் சாவி
பட்டவுடன் திறக்கின்ற பூட்டுப் பூக்கள்
கொண்டுவந்தாள் கோவேந்தன் கொழுந்து; பாட்டுக்
கொவ்வொன்றாய் எடுத்தெடுத்து மாலை செய்தாள்.
பண்டைமுறைப் படிமுதலில் செய்யும் காப்புப்
பாடலையும் தன்கணக்கில் பிழையாய்ச் சேர்த்தாள்.
தண்டைக்கால் சதிமிதிக்கக் குலுங்கி வந்து
தமிழ்க்கவிஞன் நெடுமார்பில் மாலை யிட்டாள்

தேனூறும் செம்பவள இதழாள் நின்ற
திருக்கோலம் கண்டவுடன், கம்பன் பிள்ளை
பாநூறு முடிந்ததென நினைத்தான்; பக்திப்
பாட்டுக்கு விடைகொடுத்தான்; முன்பு செய்த
நானூறும் கோவைப்பா சதங்கைக் கட்டி
நடக்கின்ற கலித்துறையில், காதல் தேனை
வானூறும் அமுதமென வாய் திறந்து
வந்திருந்தோர் அதிர்ச்சியுற வழங்க லானான்.

"பார்கொண்ட மன்னவன் பாவையுன் மார்புப்
பகைக்குடைந்து
கார்கெண்ட நுங்கிளங் காய்மட லூற்றது;
செவ்விளநீர்
தார்கொண்ட ஆடவர் போட்டுடைத் தார்;தன்
தலைகவிழ்ந்து
சீர்கொண்ட தாமரை மெல்லரும் பும்வேர்த்
திருந்ததுவே!"

என்றவன் தந்த
இனிக்கும் அதிரசப்பா
சென்றுகுலோத் துங்கன்;
செவியில் நுழைந்தவுடன்
வாளை எடுத்தான்;
வழங்கு தமிழூறும்
பாளைக் கழுத்துப்
பதைக்கவம்பி காபதியின்

பாட்டுத் தலையினைப்
பார்மீ துருட்டினன்.
நீட்டி முழக்கும்
நெருப்பீட்டிக் கூக்குரலைக்
கேட்டுச் சபையோர்
கிடுகிடுத்தார் ; மென்கரங்கள்
தாவி யணைக்கத்
தமிழ்க்கவிஞன் பொன்னுடம்பில்
ஆவி முடித்தாள்
அணங்கு !

# பாட்டும் கதையும்



# அறிஞனும் அழகியும்

நாக்கிறுக்கு ; முதிர்ந்தமதிச் செருக்கு ; தேம்சு
நதிநுரையைப் போன்றிருக்கும் வெள்ளைத் தாடி ;
தீக்குச்சி போல்பற்றும் அறிவுக் கூர்மை ;
தேளைப்போல் கொட்டுகின்ற கிண்டல் பேச்சு ;
தீக்கொள்ளிச் சுடர்க்கண்கள் ; நடக்கும் கோல்போல்
திரிகின்ற மெலிந்தவுடல் ; இவற்றி ணாலே
ஆக்கிவைத்த ஒருருவம் இருக்கு மென்றால்
அவ்வுருவைப் பெர்னாட்ஷா என்று சொல்வர்.

தாடிவைத்த பெர்னாட்ஷா ஓர்நாள் காலை
தனியாக முற்றத்தில் அமர்ந்தி ருந்தார்.
மூடிவைத்த புத்தகத்தை விரித்துப் பார்த்தார் ;
முத்தத்தைப் போல்சுவைத்துப் படிக்க லானார்
ஓடிவந்து துள்ளுகின்ற மானைப் போல
ஒய்யாரப் பெண்ணொருத்தி அங்கு வந்தாள்.
பாடிவைத்த கவிதைகளில் பதித்த கண்ணைப்
பறித்தெடுத்துப் பெர்னாட்ஷா நிமிர்ந்து பார்த்தார்.

அந்தியிலே பவனிவரும் நிலவைப் போன்ற
அழகரசி, பொற்சரிகைக் கூந்தற் காரி,
செந்தூரப் பொடிகலந்த முத்து வெள்ளைச்
சேற்றைப்போல் ஒளிவீசும் நிறத்தாள், பட்டுப்
பந்தைப்போல் துள்ளுகின்ற உடலாள், பாதி
பழுக்காத தக்காளிப் பழக்கன் னத்தில்
முந்துகின்ற புன்னகையை ஓட விட்டு
மூதறிஞன் தனைப்பார்த்தாள், தூண்டிற் கண்ணால்.

'நாடகத்தில் நீர்சிறந்த மேதை; மேலும்
நல்லறிஞர்; சொல்லழகர்; அழகி நானோ
நாடகத்தில் புகழ்பெற்ற நடிகை; மண்ணில்
நடமாடும் ஒளிமின்னல்; கன்னல்; காதல்
நாடகத்தை நாம்தொடங்கி மணந்தால் என்ன
நடமாடும் நூலகமே?' என்று சொல்லி
நாடகத்தில் பேசுகின்ற காதல் பேச்சை
நல்லறிஞர் காதருகில் பேச லுற்றாள்.

தென்றலது வசந்தத்தை மணந்து கொண்டு,
தேன்பாயும் சோலையிலே வாழ்ந்தாற் போலக்
குன்றைப்போல் புகழுடையாய்; நாம் மணந்து
குளிருக்குப் பகையாவோம்; கூடி வாழ்வோம்!
என்னழகும் உம்மறிவும் இணைந்து கூடி
ஈடற்ற குழந்தைகளும் பிறக்கும்; என்று
கன்னத்தில் காவியங்கள் வடித்துக் காட்டும்
கட்டழகி வீணையைப்போல பேச லானாள்.

அழகுக்குப் பகையான அறிஞர் கோமான்
ஆரணங்கைக் குறும்பாகப் பார்த்தார். 'கல்லில்
இழைக்காத மணிச்சரமே! பளிங்குப் பெண்ணே!
என்னழகும் உன்னறிவும் இணைந்து கூடிக்
குழந்தைபல பிறந்துவிட்டால் என்ன செய்வாய்?
கூறென்று சிரிப்போடு கேட்டார்; தேனில்
குழைத்தெடுத்த சொல்லழகி, செழித்த வாழைக்
குலைபோல வெட்கத்தால் தலைகு னிந்தாள்.

அனார்கலி-சலீமின் காதல்கதை
மொகலாயக் கலையுலகின்
இன்பக் கனவுகளுள் ஒன்று.
அக்கனவின் ஒருதுளி இங்குக்
காவிய வடிவம் பெற்றிருக்கிறது.

# வேந்தன் அணைத்த விளக்கு

ஈரநிலா ஏன்கீழே வருவ தில்லை?
எனக்கேட்டான்; என்முகத்துக் கஞ்சி என்றாள்.
கூரான வாளைப்பூ குனித லென்ன?
கூறென்றான்; என்மார்புக் கஞ்சி என்றாள்,
தேரோடி மறைவானேன்? என்று கேட்டான்;
தெரியாதா? எனநாணிச் சிரித்தாள்; போதும்
ஆராய்ச்சி என்றுசொன்னான்; அசைந்து சென்றே
அறைக்கதவை ஓசையின்றி அடைத்து வந்தாள்.

நீக்குதுகில் ஆடைக்குள் கண்ப றிக்கும்
நிலவைப்போல் நானிருக்க, அறையின் உள்ளே
நாக்குத்தீ வாய்விளக்கு நமக்கேன்? என்று
நாகரிக மாய்க்கேட்டாள்; உன்க டைக்கண்
தாக்குதலை நேராகச் சந்திக் கத்தான்
தளிர்க்கொடியே! எனக்கூறிச் சிரித்தான். ஆமாம்!
ஆக்கிவைத்த அறுசுவையை இருட்டுக் குள்ளே
ஆர்விரும்பிச் சாப்பிடுவார்? என்று சொன்னாள்.

அடுக்குமுத்து மாதுளையைப் பார சீகர்
அனுர்என்று சொல்லுகிறுர்; கண்ணே! உன்றன்
எடுப்பதற்குக் குறையாத முத்த வாயை
என்னவென்று கூறட்டும்? என்று கேட்டான்.
‘படுக்கைப்பூ’ முப்பத்தி ரண்டு முத்தைப்
பதுக்கிவைத்த சிப்பியென்று சொல்லு மென்றுள்.
கடிக்காதே முத்தென்றுன். இந்த முத்து
கடிக்கின்ற கணுக்கரும்பு முத்தே! என்றுள்.

‘அக்பர்ஷா அரியணையில் மகுடஞ் சூட்டி
அடுத்தேறும் சலிம்ஷாவே! கோட்டை மீது
மொக்குமலர்க் கொடிபடர்வ துண்டா? தங்க
முகப்பட்டம் மானுக்கும் உண்டா? நொண்டி
அக்கரையை நினைப்பதுவும், வான வில்லை
ஆடையென்று கருதுவதும் தப்பா? என்மேல்
சொக்கட்டான் ஆடுவதை நிறுத்தி விட்டுச்
சொல்லுங்கள் சரியான விளக்கம்’ என்றுள்,

‘அரங்கத்தில் ஆடுங்கால், இந்தத் தில்லி
அரியணையில் கட்டாயம் ஆடும்; இந்தச்
சுரங்கச்சொல் எதற்காகப் பேசு கின்றுய்?
சொல்லாடி! கல்மண்ணும் பிசையும் அக்பர்
இரும்புக்கை தடுத்தாலும், இராச புத்ர
எரிநெருப்புத் தீக்காடு குறுக்கிட் டாலும்
துரும்பெனக்கு மொகலரசின் தலையெ ழுத்துன்
துணைக்காலில் ஆடுகிற’ தென்று சொன்னுன்.

'கண்ணிகளில் நீகாஜல்* பார சீகக்
காப்பியத்தில் ஷாநாமா; குரல் வளர்க்கும்
பண்ணிசையில் தான்சேனின் அமுத கீதம்;
பாவைநீ நான்வணங்கும் பள்ளி வாசல்;
பெண்ணினத்தில் பொன்னினம்நீ; வான் வளர்க்கும்
பேரினத்தில் பிறையினம்நீ; அன்பே! உன்னைக்
கண்ணென்றால் நமையுறக்கம் பிரிக்கும்; ரத்தக்
கால்வாய்நீ என்னுடம்பில்; நடக்கும் மூச்சு!

'கற்கண்டுக் கூடைக்குள் இருந்தும், வீணாய்க்
கட்டிகளைக் கணக்கெண்ணும் மூட ராணோம்'
சிற்பரதி! சிந்தித்துப் பேசு கின்ற
சிதாரெங்கே? சீக்கிரத்தில் அதைத்தா! உன்றன்
விற்புருவ அலைநெளிந்து நெற்றி நீசில்
விளையாடத் தொடங்கட்டும்; பம்ப ரக்காற்
சொற்சதங்கை பேசட்டும். ஐந்த லைக்கை
சுற்றிவந்து படநாகப் போலா டட்டும்.

'கோப்பையெடு! மதுநிரப்ப வேண்டாம்; உன்றன்
குலாப்ஜாமூன் முத்தத்தை நிரப்பி நீட்டு.
பூப்படர்ந்த பின்னலரா மீன்கு திக்கப்
புரியாத இசைக்கனவில் மிதக்கும் உன்கால்
கூப்பாடு போடட்டும்; அக்பர் மண்ணைக்
கொஞ்சம்நான் மறக்கின்றேன்' என்று சொன்னான்;
நாப்பிசையும் இசையழகி. பொற்ச தங்கை
நடுக்கத்தால். அவன்நெஞ்சை நடுங்க வைத்தாள்.

* கஜல் - உருதுக் காதற் கண்ணி,

புதைவொடுக்கம் கண்டுதம்மை மறந்தி ருக்கும்
போதினிலே ஓரிரண்டு கண் வெளிச்சம்
கதவிடுக்கில் காதலர்கள் கண்டார்' ஓடிக்
கதுவுகின்ற தாழ்ப்பாளை நீக்கிப் பார்த்தார்;
பதைபதைத்துப் பெண்ணொருத்தி திறந்த கூட்டுப்
பறவையைப்போல் சிறகடித்துப் பறந்தாள்; இந்தச்
சதிகாரி யார்?என்று கேட்டான் மன்னன்;
சமையலறைச் சிறுக்கியென்று சொன்னாள் அன்னம்.

கடைவாயில் நின்றிருந்த சலீமின் முன்னால்
காவலர்கள் அப்பெண்ணைக் கொணர்ந்தார். 'பெண்ணே!
விடிவதற்கு முன்பாக விளக்க ணைத்து
விடுகின்றோம்; ஏன்?' என்றான்; தெரியா தென்றாள்.
'நடுஇரவில் நடப்பதைக்கண் டவ்வி ளக்கு
நாலுபே ரிடம்சொல்லும்; அதனால்!' என்றான்.
உடைவாளை அவனெடுத்தான்; அந்தப் பெண்ணின்
உயிர்விளக்கை அக்கணமே அணைத்து விட்டான்.

# நெருப்பில் வெந்த நிலா

கொத்தான திராட்சையினைப் பிழிந்தெ டுத்துக்
குடிக்கின்ற மதுவாக்கிக் குளத்தில் தேக்கி
முத்தழகுப் பாவையரை அக்கு ளத்தில்
மூழ்கவைத்து மீன்களைப்போல் நீந்த வைத்துச்
சித்திரத்தைப் போலிருக்கும் அவர்கள் மேனி
சிந்துகின்ற மதுச்சாற்றைக் கிண்ணத் தேந்திப்
பித்தேறக் குடித்துவிட்டுக் காத லிக்கும்
பிரபுக்கள் வாழுமிடம் பிரெஞ்சு நாடு.

உடைத்தெடுத்த முந்திரியின் பருப்பைப் போன்ற
உடலழகுப் பூவையரும், அவர்கள் வாயில்
வடித்தெடுத்த முத்தத்தைக் கவிதை யாக்கும்
வளம்பெற்ற கவிஞர்களும் அங்கே உள்ளார்.
கடிக்கின்ற சுவையூட்டும் கனிக்கூட் டத்தைக்
காஞட்டு மலைச்சரிவில் அறுத்தெ டுப்பர் ;
துடிக்கின்ற பட்டழகுப் பருவப் பெண்டிர்
துவர்வாயில் புன்னகையை அறுத்தெடுப்பர்.

ஐரோப்பாக் கண்டத்தில் பிரெஞ்சு நாடோ
அழகான பூந்தோட்டம்; காமக் கோட்டம்!
பருவத்தைத் தாலாட்டும் தொட்டில்; வண்டுப்
பணக்கார இளைஞர்க்கோ இன்பக் கட்டில்,
பருவத்தில் புதுக்கவிதை வடித்துக் காட்டும்
பூவையர்கள் நடமாடும் அழகு மேடை.
செருக்களத்தில் உயிர்கொடுத்துப் புகழை நாட்டும்
சிங்கங்கள் வாழ்கின்ற புரட்சிக் கூடம்.

பகைப்புலத்தார் பாய்ந்ததனால் பிரெஞ்சு நாடு
பாதிக்கும் மேலாகப் பறிபோ யிற்று
பகற்போதில் நிலாக்கூட்டம் வட்டம் போடும்
பாரீசுப் பொன்னகரும் பறிபோ யிற்று.
நகைக்கின்ற நங்கையரின் மடிமீ தேறி
நாட்டாட்சி செய்துவந்த பிரெஞ்சு மன்னன்
புகைக்கூட்டம் பறப்பதுபோல் பறந்தான்; பட்டுப்
புதுப்பெண்போல் சிற்றூரில் மறைந்து கொண்டான்

ஒளிந்திருந்த மாமன்னன் எதிரில் ஓர்நாள்
ஒளிமின்னல் போலொருத்தி வந்து நின்றாள்.
'பளிங்கிற்கு மகளாகப் பிறந்த பெண்ணே!
பார்ப்பதற்கா எனைவிரும்பி ஓடி வந்தாய்?
கிளிப்பேச்சை மிழற்றிவிடு; மாளி கைக்குள்
கின்னரத்தை உறைநீக்கி வைத்து வந்தேன்;
விளையாட வேண்டுமினி; அதன் நரம்பை
விரலாலே தடவுதற்குத் துடிக்கின் றேன்நான்.

'எங்கிருந்து வருகின்ருய் திராட்சைக் கொத்தே?
எதிர்நின்று கண்பறிக்கும் பாண்டி முத்தே!
மங்கையர்க்கு மாதிரியாய் அமைந்த கூந்தல்
மடமானே! என்னிடத்தில் வேலை என்ன?
கொங்கலரே!' கூறென்ருன் குடித்து விட்டுக்
குழறுமொழி பேசுகின்ற பிரெஞ்சு மன்னன்.
'தங்கமுடி பறிபோன மன்ன! இந்தத்
தையல்பேர் ஜோன்ஆப்ஆர்க்' என்ருள் மங்கை.

'பகைவீரர் புகுந்துவிட்டார் நாட்டில்! நீங்கள்
படுத்துறங்கு கின்றீரே பழக்கொத் தோடு!
நகையாரோ உமைப்பார்த்துப் பிறநாட் டார்கள்?
நாடாளும் மன்னருக்குப் போர்க்க ளந்தான்
முகையாடும் மலராடும் அருவிச் சோலை;
முன்னேடும் குதிரைதான் ஏறும் கட்டில்;
பகையாடும் ஆட்டந்தான் ஆட்டம்; சாவில்
பதைக்கின்ற கூக்குரல்தான் இனிக்கும் பாடல்.

'பஞ்சணைப்போர் இனிவேண்டாம் அரசே! பாயும்
பகைப்போர்க்குப் புறப்படுவீர்!' என்று சொல்லிக்
கெஞ்சிநின்ருள் ஜோன்ஆப்ஆர்க்; கிழங்கு மேனிக்
கிள்ளையர்க்குத் தன்வாழ்க்கை உடைமை எல்லாம்
தஞ்சமென்று தந்திருந்த அரும்பு மன்னன்
தையல்சொல் கேட்டவுடன் திகைத்துப் போனுன்.
அஞ்சிநின்ருன்; பேரிடியால் தாக்கப் பட்ட
ஆல்ப்சுமலைச் சிகரம்போல் அதிர்ச்சி பெற்ருன்.

'போர்க்களமா! ஐயோநான் கண்ட தில்லை
புதுமலர்போல் மங்கையரைக் கண்ட துண்டு
போர்க்கவசச் சுமைதானேன்; சீன நாட்டுப்
புதுப்பட்டால் என்னுடலை மூடிக் காத்தேன்
போர்க்கத்தி என்கையில் பட்ட தில்லை
பொன்ஆழி பூட்டத்தா னேவி ரல்கள்!
போர்ப்பேச்சை என்னிடத்தில் பேச வேண்டாம்;
பொல்லாத தீக்கனவு வந்து தோன்றும்.

'வாளெடுத்துப் போர்க்களத்தில் புகழை நாட்டல்
வாள்வீரர் நாகரிகம்; மணத்தைக் கொட்டும்
தூளெடுத்து முகத்திற்குப் பூசி இன்பத்
துயர்தருதல் பெண்டிற்கு நாக ரீகம்
ஆளெடுத்துக் கொடுக்கின்ற கனியை, நேபிள்ஸ்
அழகியர்கள் தளிர்க்கையால் உரித்த ளிக்கத்
தாளெடுத்துச் சிலர்பிடிக்க, மதுவ ருந்தித்
தள்ளாடல் மன்னவர்க்கு நாக ரீகம்.

படைநடத்தத் தளபதிகள் இருக்கின் றார்கள்
பஞ்சணையை நான்விட்டு நகர மாட்டேன்
விடைகொடுத்தேன் பூங்காற்றே அதிர்ந்து செல்வாய்
வேலையெனக் கதிகம்' என்று சொல்லி விட்டான்.
'தடையொன்றும் சொல்லாதே மன்னா! இந்தத்
தையலுக்கோர் படைவேண்டும்; ஆங்கி லேயர்
இடையைநான் முறிப்பதற்கே ஆணை வேண்டும்'
என்றுசொன்னாள். மன்னவனும் இசைவு தந்தான்.

பாடுகின்ற வளையலுக்கு விடைகொ டுத்தாள்
பட்டாளக் கத்திக்குக் கைகொ டுத்தாள்
ஓடுகின்ற குதிரையின்மேல் ஊர்ந்து வந்தாள்
ஒடிகின்ற மெல்லிடைக்குக் கச்சை தந்தாள்
பாடுகின்ற கனிவாய்க்கு முழக்கம் தந்தாள்
பழமாகும் மார்புக்குக் கவசம் தந்தாள்
ஆடுகின்ற கண்ணுக்குச் சீற்றம் தந்தாள்
அந்திநிலா பந்தயத்துக் குதிரை போன்றாள்;

'வெட்டட்டும் கூர்வாள்கள். பகையை நோக்கி
வெடிக்கட்டும் அதிர்வேட்டு; போர் முழக்கம்
எட்டட்டும் நெடுவானை; ஈட்டிக் கூட்டம்
எதிரிகளின் மார்புக்குள் குடியே றட்டும்
கட்டட்டும் மூட்டையினை அவர்கள்; இல்லை
கட்டாரி முத்தத்தைச் சுவைபார்க் கட்டும்
பட்டத்தைப் போல்நமது கொடியின் கூட்டம்
பறக்கட்டும் நெடுவானில்!' என்று சொன்னாள்.

ஓடியது பகைக்கூட்டம் நரிக்கூட் டம்போல்
உடைவாளுக் கோய்வுதந்தாள் கன்னி அன்னம்
ஆடியது கொடியசைத்து வெற்றி; அந்த
அரைக்கச்சைப் பச்சைமயில் திரும்பி வந்தாள்
தேடிவந்த மன்னனுக்கு ரீம்சே என்னும்
திருநகரில் முடிசூட்டி ஆட்சி தந்தாள்
நாடிவந்த அரியணையில் ஏறி மன்னன்
நங்கைக்கு முன்கையில் முத்தம் தந்தான்.

கட்டிலுக்குப் பிறந்திருந்த நங்கை கத்திக்
களத்துக்கு மணப்பெண்ணாய்த் தன்னைத் தந்தாள்.
பட்டாளத் துணையுடனே ஆங்கி லேயப்
பகைவர்களை எல்லைக்கே துரத்திச் சென்றாள்.
கட்டழகி கோட்டைக்கு வெளியில், ஓர்நாள்
கடும்போர்செய் திருக்கையிலே பிரெஞ்சு வீரர்
பட்டென்று கதவுதனைப் பூட்டி விட்டார்;
பனிமலரோ பகைவரிடம் சிக்கிக் கொண்டாள்.

புன்னகைப்பூ குலுங்குகின்ற கொடியை வீதிப்
புழுதியிலே புரட்டுவது கொடுமை யன்றோ?
மின்னழகுப் பெண்ணழகி ஜோனைத் தூண்டில்
மீனைப்போல் துடிதுடிக்க இழுத்து வந்தார்.
பொன்னகரம் எனத்தக்க ரூனில், அந்தப்
புள்ளியில்லாப் பெண்மானைக் கொண்டு சேர்த்தார்;
மன்னருக்கும் ஆணைசொலும் ஆற்றல் பெற்ற
மதநீதி மன்றத்தில் நிறுத்தி வைத்தார்.

அந்நகரம் பிரெஞ்சுமண்ணில் இருந்திட் டாலும்
ஆங்கிலரே ஆளுகின்ற உரிமை பெற்றோர்;
அந்நகரப் பாதிரிமார் பிரெஞ்சு நாட்டில்
அவதரித்தோர் என்றாலும் அடிமைப் பட்டோர்.
அந்நியர்கள் வைத்ததுதான் சட்டம்; அந்த
அழகான ரூன்நகரக் குழந்தை கூட
அந்நியர்கள் கையசைத்தால் அலறும்; போதும்
அடக்கென்றால் வாய்மூடி மௌனி யாகும்.

'பெண்மகளுக் கேயிந்த வீரம்? நீயோ
பெண்ணல்லை! பேய்மகளே! குட்டிச் சாத்தான்
கண்ணுக்கு முன்னிற்க வேண்டாம்; சூன்யக்
காரிக்கு நெருப்புத்தான் கடைசி முத்தம்!
திண்ணமிது! போ! போ! போ!' என்று சொல்லித்
திருவடியார் கூட்டத்தார் நீதி தந்தார்.
எண்ணத்தில் படிந்திருந்த இருட்டு, தாடி
இருட்டாக அவர்முகத்தில் வழிந்த தென்பேன்.

பனிமலரை அங்கிருந்து பறித்துச் சென்றார்
பாவாடைப் பாதிரிமார் எழுந்து சென்றார்
குனியாமல் கொழுந்துவிட்டு நிற்கும் தீயில்
குளிர்நிலவைக் குளிக்கவைத்தார்; பழுத்த
கொவ்வைக்
கனியிதழைக் கண்ணுடிக் கன்னந் தன்னைக்
கனுவிருக்கும் செங்கரும்பு மேனி தன்னைப்
பனிமுல்லைக் கொடியாளும், காதலன் போல்
பற்றிநின்ற செந்தீக்கு விருந்து வைத்தாள்,

# போர்வை

பரணிநாள் பிறந்தபெருங் கவிஞர், சங்கப்
பதக்கத்தில் கண்பறிக்கும் எண்பத், தைந்து
தரமான முத்துக்கள் அழுத்திச் சென்ற
தமிழ்ச்சிற்பி, தழைத்தபெரும் உம்பற் காட்டை
வருவாயாய்த் திருவாய்க்குப் பெற்று வாழ்ந்த
வாகீசர், பாணுற்றுப் படை நடத்தும்
பெரும்பரணர் எழுந்திருந்தார்; வாய் திறந்து
பேசட்டும் என்றவையோர் காத்தி ருந்தார்.

"அடிக்கால்கள் கொடிக்காலில் பின்னக், கூடி
ஆடிவரும் விறலியரைப் பலாப் பழங்கள்
தடுக்கிவிடும் தமிழ்ப்பொதினி வேந்தன், பேகன்
தனையின்று பார்த்துவந்தேன்; ஒட்ட கம்போல்
அடுக்குமலை முதுகுகளைக் கடந்து செல்ல
ஆனைதந்தான்; என்மனைவி நடக்கும் போது
நடுக்குமிடை நடுங்காமல் இறுக்கிக் கட்ட
நல்லமணி மேகலையும் அவட்குத் தந்தான்.

"ஆறுறுப்புப் பெற்றுவரும் கலிப்பாப் போல
அறுசுவையூண் எமக்களித்தான்; விறலி யர்க்கு
நூறுவகை அணிகொடுத்தான்" ஆடை யென்னும்
நூல்நயத்தைப் பொன்னிழைத்துக் கொடுத்தான்;
மேகம்
ஆறுகுளம் ஏரிகடல் நிரப்பு தல்போல்
அனைவர்க்கும் அள்ளியள்ளிக் கொடுத்தான்; வாழை,
தாறுகளைச் சுமப்பதுபோல், பரிசு தூக்கித்
தள்ளாடிப் பாணரெல்லாம் நடக்கின் றார்கள்.

"எட்டுக்காற் பூச்சிலையைப்போல், நடுவில் நீலம்
இழைத்திருக்கும் பொற்பூவைத் தலையில் சூடித்
தொட்டுப்பார் தொட்டுப்பார் என்று கண்ணால்
துணைவர்களை விறலியர்கள் அழைக்கின் றார்கள்.
கொட்டைப்பாக் களவுள்ள வைரக் கற்கள்
குயிற்றிவைத்த கணையாழி புலவர்க் கெல்லாம்
தட்டின்றிக் கிடைப்பதனால் தடவிக் கொண்டே
தம்பாட்டை அவரெல்லாம் மறக்கின் றார்கள்.

"குலுங்குகின்ற விளம்பரப்பூக் காட்டி, காயே
கொடுக்காத பாதிரிபோல் பலபேர் உள்ளார்;
விளப்பரப்பூ இல்லாமல் பழங்கொ டுக்கும்
வேர்ப்பலா வள்ளலிந்தப் பேகன், மேகம்
முழங்குவதைக் கண்டாடும் மயிலைக் கண்டு
முகம்வருந்தி நடுங்குவதாய் எண்ணிப் போர்வை
வழங்கியதைக் கண்ணாரக் கண்டேன்" என்று
வாயார அவன்புகழைப் பரணர் சொன்னார்;


பெரும்பூதன் எழுந்திருந்தான் அவையில் ; சங்கப்
　　பெரும்புலவர் நடுவிலவன் பூத வாதி ;
இரும்புள்ளந் தனைப்பெற்றேன் ; பெரியார் போல
　　ஏன்?என்று கேட்கின்ற கேள்விச் சிங்கம்.
பெரும்பேச்சுப் புலவரெல்லாம் இவன் இடுக்கிப்
　　பிடிக்குள்ளே தவிப்பார்கள் ; இன்று சும்மா
இருக்காமல் ஏனெழுந்தான் பூதன் ? என்றே
　　எல்லாரும் விழித்தார்கள். பூதன் கேட்டான் ;

''அரிவாள்போல் அவரைக்காய்க் கூட்டைச் சாமை
　　அரிசியுடன் கலந்துண்ணும் பாணர்க்(கு) ஆட்டுப்
பொரியலுடன் உணவளித்த தாலோ, செம்பொன்
　　பொற்கிழிகள் புலவர்க்குக் கொடுத்த தாலோ,
பெருமைவரும் என்றுநீர் எண்ணு கின்றீர் ?
　　பெருமையெல்லாம் அச்சோறு நம்வ யிற்றில்
செரிக்கின்ற வரையில்தான் ; கொடுத்த செம்பொன்
　　செலவழிந்தால் பேசுநாம் நினைப்ப துண்டா ?

'நாட்டியத்து மயிலுக்கும் குளிரி ஞலே
　　நடுங்குகின்ற மயிலுக்கு வேறு பாடு
காட்டுக்குள் அறியாத வேந்தன், நாட்டுக்
　　கடமைகளை எவ்வாறு புரிந்து கொள்வான் ?
வேட்டுக்கும் தும்மலுக்கும் வேறு பாடு
　　விளங்காதா ? வெண்டளைகள் விரவு கின்ற
பாட்டெல்லாம் வெண்பாவா ? காலங் காட்டு
　　பகையெல்லாம் இடைநிலையா ? பாட்டு வேந்தே !

"போர்க்களத்தின் கொடுமைகளை எடுத்துக் காட்டிப்
புவிமன்னர் பகைதீர்க்கும் பரண! பேகன்
கார்க்கூந்தல் கண்ணகியைப் பிரிந்து வாழும்
கதையுமக்குத் தெரியாதா? முல்லை வேலி
ஊர்ப்பரத்தை உதடுகளின் கொடைக்கு வள்ளல்
உட்கார்ந்து கிடக்கின்றான்; அந்தப் பேகன்
வேர்ப்புகழை விளாசுகிறீர்; பாட்டுப் போர்வை
விரித்திந்தக் களங்கத்தை மூடு கின்றீர்.

"கார்போன்ற கருங்கூந்தல் நடுங்க, ஏக்கக்
கண்ணிரண்டும் புண்ணாகி நடுங்க, வில்லின்
கூர்போன்ற உதட்டுமுனை நடுங்க, செங்கை
குலைக்காந்தள் போல்நடுங்க, உருட்டி விட்ட
தேர்போலக் கிடக்கின்றாள் மனைவி; அந்தத்
தென்பொதினிப் பொன்மயிலை மூடு தற்குப்
போர்வைகொண்டு போகட்டும் பேகன்" என்று
பூதனங்கு முழக்கமிட்டான்; பரணர் போனார்.




# சுவைக்கு ஒன்று

# ஊடலும் கூடலும்

முத்தமிழைத் தேனென்று சொன்னேன் ; என்றன்
முத்தழகி சினங்கொண்டாள் ; எவளு தட்டில்
முத்தமிழைத் தீர்?என்று கேட்டுக் கண்ணீர்
முத்தாரம் பாய்ச்சிநின்ருள் ; இளங்கோ தந்த
முத்தமிழைத் தேனென்றேன் மீண்டும் ; மின்னும்
முத்துப்பல் வரிசையினை உதட்டால் மூடி
முத்தமிழைத் தாளெனக்கு கண்ணே ! உன்றன்
முத்தமுந்தான் தேனென்றேன் ; மீண்டும் தந்தாள்.

சுட்டுமுன்றன் சுடர்விழிகள் இரண்டும், வானச்
சூரியனும் சந்திரனும் என்றேன் ; என்னைச்
சுட்டுவிடும் பார்வையினுல் பார்த்தாள் ; வட்டச்
சூரியனுக் கொளியதிகம் ; கையை நீட்டிச்
சுட்டுகின்ற அம்புலிக்கோ வெளிச்சம் சற்றுச்
சுருக்கந்தான் ; ஐயையோ ! நீரும் சொல்லால்
சுட்டுகின்றீர் என்னெருகண் பார்வை சற்றுச்
சுருக்கமென்றே என்றுசொல்லித் தேம்பி நின்ருள்.

புன்குமரம் நெற்பொரியைப் போன்று சின்னப்
பூவுதிர்க்கும் இளவேனிற் பருவந் தன்னில்
இன்னிசையை வாரியிறைக் கின்ற செங்கண்
இளங்குயிலே என்றுசொன்னேன்; பளிங்குக் கன்னப்
புன்னகைக்கு மூடுவிழா செய்தாள்! உள்ளம்
புண்பட்டாள்; நானென்ன கறுப்பா? என்றாள்.
சின்னவிரல் காரி!உன்றன் பாட்டைப் போலச்
சிறுகுயிலும் பாடுதென்றேன்; ஒட்டிக் கொண்டாள்.

சோற்றுக்குள் கல்லிருந்தால் உண்ணும் போது
சுவைகுன்றும்; இதைநீயேன் அறிய வில்லை?
நேற்றுத்தான் கனிதந்தாய்; கரும்பு தந்தாய்;
நிலவெரிக்கும் உன்னுடலின் நெருக்கம் தந்தாய்!
ஆற்றோரம் கீற்றுதட்டால் முத்தந் தந்தாய்
அல்லிப்பூச் சுனைபோலக் குளிர்ச்சி தந்தாய்
சேற்றுத்தா மரைப்பூவே! அணைக்கும் போது
சேல்கெண்டை போலின்று குதிக்க லாமா?

பாரதியார் பாடிவைத்த சந்தப் பாட்டே!
பாவேந்தன் பாடுமெண்சீர் விருத்தப் பாட்டே!
ஈரடியால் நடக்கின்ற குறளைப் போல
இன்பமெல்லாம் தருபவனே! மழைக்குப் பின்னே
ஏரடிக்க துடிக்கின்ற உழவன் போல
என்னுள்ளம் துடிக்கின்றேன்; என்றன் நோயைப்
பாடிநீ! ஏட்டிக்குப் போட்டி யாகப்
பகர்கின்றாய் குதர்க்கச்சொல்! என்று சொன்னேன்.

முகத்தோடு முகஞ்சேர்த்தாள்; என்னு தட்டில்
முத்தவிழா நடத்துதற்குத் தொடங்கி விட்டாள்.
சுகங்காணத் துடிக்கின்ற எனது காதற்
சுந்தரனே! சோற்றிலிடும் உப்பைப் போல
மிகச்சுவையைத் தருவதன்றோ ஊடல்? என்று
மிலாறெடுத்து வீசுகின்ற கண்ணி சொன்னுள்.
அகப்பட்டேன் அவளணைப்பில்; நெஞ்சக் கூட்டில்
அடைத்துவிட்டாள்; நானினிமேல் பறப்ப தெங்கே?

# மருத்துவ மான்கள்

மருத்துவ மனைக்குச் சென்று
    மதிமுகச் செவிலிப் பெண்டிர்
கருத்துடன் தொண்டு செய்யும்
    காட்சியை ஓர்நாள் கண்டேன்
அரிவையர் அவர்கள் அல்லர்;
    அழகிய அன்னக் கூட்டம்!
பரிவுடன் படுக்கை தோறும்
    பழகிடும் பால் நிலாக்கள்!

படுக்கையை விரிப்பர்; கொல்லிப்
    பலாச்சுளை வாய் திறந்தே
அடிக்கொரு தரம் சிரிப்பர்;
    அழகிய மயில்போல் ஆடித்
துடிப்புடன் நடப்பர்; மான்போல்
    துள்ளுவர்; உள்ளத் தன்பை
வடித்தெடுத்து எதிரில் வைப்பர்;
    வட்டிலைச் சுமந்து செல்வர்.

கொடியிடை அசைப்பர்; தேனைக்
கொட்டுவர் அமுதப் பேச்சால்!
அடியெடுத் தசைந்து வந்தே
அழகிய தேர்போல் நிற்பர்!
கடிகார ஓசை போலக்
காற்செருப் போசை செய்ய
அடிமாறி நடந்து செல்லும்
அழகினை என்ன சொல்வேன்!

அருந்துயர்க் கடலில் நம்மை
ஆழ்த்திடும் நோய்கள் எல்லாம்
மருந்தினுல் பாதி போகும்;
மங்கையர் இவர்கள் கையில்
அருந்தினுல் பாதி போகும்;
அழகுமோர் மருந்து தானே?
மருந்தினுல் தீரா நோய்இம்
மங்கையர் தொட்டால் தீரும்.

# என்றும் வாழும்!

துடிக்கின்ற நெடும்பகையை வாவா என்று
துள்ளுகின்ற சுடர்வாள்போல் முறுக்கு மீசை !
வெடிக்கின்ற இடியோடு கனலைக் கக்கி
விழிக்கின்ற மின்னலைப்போல் இமைக்கும் கண்கள்!
படிக்கின்ற திருக்குறளின் ஏட்டைப் போலப்
பக்குவமாய் அறங்கூறும் அறிவு நெற்றி !
வடிக்கின்ற தேனைப்போல் இனிக்கும் பேச்சு
வாய்த்தபெருங் கவிஞனடா எட்டை நாட்டான்.

இனிமேலோர் தேனில்லை இனிமை செய்ய
இனிமேலோர் குயிலில்லை இனித்துக் கூவ
இனிமேலும் இசையலைகள் எழுப்பிக் காட்ட
இவ்வுலகில் வீணையில்லை ; எழும்பிச் சீற
இனிமேலும் எரிமலைகள் எங்கும் இல்லை
எனும்படியாய் இளஞ்சிரிப்புக் கண்ணன் பாட்டை
இனிக்கின்ற குயிற்பாட்டைப் பாப்பா பாட்டை
எழுச்சிமிக்க 'கீதத்தை' இசைத்துத் தந்தான்.

மலைபோன்ற பெருங்களிற்றுப் படையை வென்ற
　　மாமன்னர் பேரரசும் மறைந்து போகும்
வளையாத கொடுமுடியை விண்ணில் நீட்டி
　　வளர்ந்திருக்கும் பனிமலையும் தூள்தூ ளாகும்
கலையாத ஓவியம்போல் யமுனை ஆற்றின்
　　கரைநிற்கும் கலைக்கோயில் அழிந்து போகும்
குலையாத நெஞ்சுடைய கவிதை வேந்தன்
　　குவித்துவைத்த நன்னூல்கள் என்றும் வாழும்.

---

ஆனந்தவிகடன் பாரதி மலரில்
பரிசு பெற்ற முதற் பாடல்.

# தமிழ்த்தேர் சாய்ந்தது!

சந்தனக் காடு சாய்ந்தது; மேற்கில்
செந்தமிழ் ஞாயிறு சென்று மறைந்தது;
குமுறும் எரிமலை அமைதி கொண்டது;
தமிழ்ப்பகை கண்டால் இமைப்பினில் பாய
வாலை முறுக்கிய வரிப்புலி ஒய்ந்தது;
கோளரி முழக்கம் குரலொடுங் கியது;
மோனை முத்தமிழ் மும்மதம் பொழிந்த
யானை இன்று மண்ணில் மறைந்தது;

பொங்கும் பேரொளி எங்கும் பரப்பிய
தங்கத் தமிழ்த்தேர் தரையில் சாய்ந்தது.
ஆவியைப் பாட்டால் அள்ளிப் புதுவையில்
கூவிய மாங்குயில் குரலொடுங் கியதே!
இசையமு தெழுப்பி எங்கணும் இறைத்த
வசையிலாப் பேரியாழ் மண்ணில் புதைந்ததே!
அழகின் சிரிப்பொலி அணைந்ததே! தமிழுடல்
பழகிய மூச்சுப் பறந்து சென்றதே!

இளைத்த தமிழுக் கியக்கம் கண்ட
களித்தமிழ் மன்றக் கட்டடம் தகர்ந்ததே !
பாட்டுத் தமிழால் பழமை நொறுங்க
வேட்டுக் கிளப்பிய வீரன் மடிந்தான்
முற்றிய மடமை நெற்றுகள் உதிர
வெற்றிவாள் ஓச்சிய வீரன் மடிந்தான் !

அவனோர்,
கற்பனை சிறந்த கலித்தொகைக் காப்பியம் !
சிற்பம் சிறந்த பல்லவர் கோயில் !
காவிய வெள்ளம் கவிழ்க்கும் காவிரி !
பாவியம் தமிழில் படைத்த பட்டடை !
முத்துக் கற்பனை உவமைகள் சிதறித்
தத்தி இறங்கும் தமிழ்த்தே னருவி !
புதுத்தமிழ் அரும்பப் புறப்பட்ட தென்றல் !
எதிர்வரும் பகையின் இதயம் நடுங்க
அதிரத் தாக்கும் அஞ்சாப் பேரிடி !
கொடுமையின் முன்னர்க் குனியா இமயம் !

---

பாவேந்தர் மறைவுக்கு
இரங்கிப் பாடியது

# ஆண்டவன் கருணை !

அஞ்சு வயதினில் இங்கர்சால்—ஓர்
அல்லிக் குளத்தின் அருகிலே
பிஞ்சு மலர்க்கரம் வீசியே தந்தை
பின்பு மகிழ்வுடன் சென்றனன்,
கொஞ்சு மொழிபல கூறினன்—தேனைக்
கொட்டிப் புதுக்கதை பேசினன்.
அஞ்சி உளம்நடுங் காமலே—அவன்
ஆயிரம் கேள்விகள் வீசினன்.

ஓடைக் குளிர்புனல் பொய்கையும்—அதன்
ஓரத்தில் பன்னிறப் பூக்களும்
பாடும் பறவை யினங்களும்—ஒளி
பாய்ச்சிடும் செம்பொற் பரிதியும்
காடும் உயர்ந்த மலைகளும்—அங்குக்
காட்சி விருந்துகள் வைத்தன ;
வேடிக்கை பார்த்தனர் தந்தையும்—கை
வீசி நடந்த சிறுவனும்.

பூத்த மலர்கள் சிரித்திடும் — அந்தப்
பொய்கையில் நின்றதண் ணீரிலே
வாத்துகள் நீந்தித் திரிந்தன — மீன்கள்
வாலை யசைத்தங்கு மின்னின.
ஆத்திகப் பாதிரித் தந்தையும் — தன்
அன்புச் சிறுவனை நோக்கியே
காத்தருள் செய்யும் கடவுளின் — உள்ளக்
கருணைச் சிறப்பினைப் பேசினார்,

''வாத்தின் அடிகளைப் பாரடா — அதன்
வாலின் அசைவினைப் பாரடா !
பூத்த புதுமலர் போலவே — உடல்
பூரித் திருப்பதைப் பாரடா !
வாத்தின் அடிகள் துடுப்படா — அதன்
வாலின் அசைவு சுக்கானடா !
நீர்த்திரை மேல்செலும் கப்பல்போல் — அது
நீந்தித் திரிவதைப் பாரடா !

''சத்தம் சிறிதுமில் லாமலே — அடி
சாய்த்துப் படகென நீந்தியே
தத்தும் தவளை யினங்களை — அது
தாவிப் பிடிப்பதைப் பாரடா ;
எத்தனை அற்புதம் ஆண்டவன் — படைப்''
பென்று பலப்பல கூறியே
சித்தம் களிப்புறப் பேசினார் — மகன்
சிந்தனை யோடதைக் கேட்டனன்.

"முத்தம் கொடுத்திடும் தந்தையே—உச்சி
மோந்து தழுவிடும் தந்தையே !
இத்தரை மீதினில் வாத்தினைப்—படைத்
திட்ட அருளுடை ஆண்டவன்
தத்தும் தவளை யினத்தையும்—இந்தத்
தாரணி மீது படைத்தனன்
செத்து மடிவதற் காகவா இங்குச்
சேற்றுத் தவளை பிறந்தது ?

''கத்தும் தவளை யினத்திடம்—தெய்வம்
கருணை காட்டுவ தில்லையோ ?
கொத்திக் கொலைசெய்தற் கோரினம்—அஞ்சிக்
கோழைபோல் வாழ்வதற் கோரினம் !
எத்திப் பிழைப்பதற் கோரினம் !—இங்கே
ஏழையாய் வாழ்வதற் கோரினம் !
மெத்தக் கொடுமையென் தந்தையே !—இதை
மேன்மைப் படைப்பென்று சொல்கிறீர் ?

"அஞ்சி நடுங்குதென் உள்ளமே இந்த
ஆண்டவன் செய்கையை எண்ணுங்கால்
நெஞ்சு பொறுப்பது மில்லையே"—என்று
நெஞ்சம் திறந்தவன் பேசினன்.
கொஞ்சும் சிறுவனின் பேச்சிலே—இந்தக்
குள்ளச் சமூகத்தின் கட்டுகள்
பஞ்சினைப் போலப் பறந்தன—அங்குப்
பகுத்தறி வெண்ணங்கள் மின்னின.

# அவள் அடிகள்

கதங்கொள் யானைக் காவிரி நாட்டின்
சதங்கைச் சரித்திரம் ; சந்தனப் புருக்கள்.
மேடை அலையில் மிதக்கும் தோணிகள்.
ஆடைக் கூடாரத் தழகிய மான்கள்.
பல்லியப் பாட்டுக்குப் பதவுரை கூறும்
அல்லிகள் ; இசைக்காற் றலைக்கும் தளிர்கள்.
கூத்தியல் வகுத்துக் கொண்ட பொதுவியல்
வேத்தியல் களுக்கு விருத்தி யுரைகள்.

குதிக்கும் தந்தக் கனவுகள் ; நெஞ்சில்
பதிக்கும் பரதப் பாட்டு முத்திரைகள்.
இசைஉடன் பாடுகள் ; ஏறி அரங்கில்
அசையும் ஆயிரத் தெட்டு கழஞ்சுகள்.
கொடுக்கும் கொள்கைக் குத்தகைக் கோவலன்
படுக்கைக் காப்பியப் பாயிர வரிகள்.
சந்தம் வேறு படுத்திக் காட்டும்
செந்தொடை முரண்தொடைச் செய்யுள் அடிகள்.

அஞ்சுகற் பனைகளை அழகாய் வளர்த்து
பஞ்சகா வியங்கள் ; செம்பஞ்சு மேடைகள்.
மாசாத்து வாண்மகன் மடிமீது மீட்டிய
பேசாத யாழ்கள் ; பின்னும் அன்னங்கள்
குதித்தா மரைகள் ; கொஞ்சும் அஞ்சுகங்கள்
மிதித்துக் கிளம்பும் மேடைப்புல் லரிப்புகள்.

நடிப்பு நாயகங்கள் ; நடக்கும் சிந்தனைகள்.
அடித்துப் பறக்கும் ஆடற் சிறகுகள்.
நாட்டிய அரங்கில் நம்பியர் உயிர்களைப்
போட்டுக் குலுக்கும் புதுக்கிலு கிலுப்பைகள்.
இசைதவ ழுத இருநடுக் கங்கள் ;
வசைபல பெற்று வாள்வாய் நோக்கிப்
புகார்ச்செவ் வேளைப் போக்கிய அடிகளே !


# பசி

ஏழைகளின் பிரதிநிதி ; வயிற்றுக் காய்ச்சல் ;
இல்லாரை வருத்துகின்ற குடற்புண் ; செல்வர்
வாழையிலைக் கொள்கைக்கு வைரி ; எங்கும்
வறியவரின் திருவோட்டுத் தோழன் ; தங்கப்
பேழையினால் அரசியலைப் பேரம் பேசும்
பெருஞ்செல்வர்க் கெதிரான வாக்குச் சீட்டு ;
ஆழியெனும் கடல்சூழ்ந்த உலகில், நானே
அடிவயிற்றின் அவமானம் ; நாட்டின் ஈனம்.

ஆண்டவனுக் கறைகூவல் ; ஆதாம் ஏவாள்
அணையாமல் ஏற்றிவைத்த நெருப்பு வேள்வி.
தீண்டிவருத் தும்வறுமைக் குற்றத் துக்குத்
தீர்ப்பளித்த அடிவயிற்று நரகம் ; பட்டுப்
பூண்டபெரும் புளியேப்பக் காரர் சொர்க்கம் ;
புசிப்பறியா வெறுநிலத்தில் மூளைத்த முட்கள்.
நீண்டிருக்கும் தசைச்சுரங்கச் சதுப்பு மண்ணில்
நின்றெரியும் எரியாவி ; கொள்ளி வாய்ப்பேய் !

பொதுவுடமைத் தத்துவத்தின் புத்தன்; மார்க்சின்
போதிமரம்; ஞானகுரு; ஆட்சி வேட்டை
அதிகார மந்திரச்சொல்; திட்டத் துக்குள்
அடங்காமல் வளர்கின்ற உடலா தாரம்.
நிதிதேடும் எழுத்தாளர் வீட்டில் என்றும்
நிலைத்திருக்கும் மூலதனம்; அவ்வை கூடப்
பதிலறியா முடியாத வயிற்றுக் கேள்வி;
பாருலகின் பொதுவான ஒருமைப் பாடு,

வள்பரணர் போன்றபெருங் கவிஞர், பாட்டில்
வளர்ந்துவந்த கருப்பொருள்நான்; உலகில் யாரும்
என்பிறப்பை அறியாத காரணத்தால்
இறைவனுக்கும் மூத்தவன்நான்; உயிரி னத்தின்
துன்பத்தை அளக்கின்ற கோல்நான்; மக்கள்
தோலுடம்பின் கட்டாயம் நான்தான்; ஏதும்
தின்பதற்குக் கிடைக்காத போது, சாத்தான்
செய்வதெல்லாம் செய்வதுதான் என்றன் வேலை.


அரங்கம்



# எடுத்துயர்த்தும் குறிக்கோள்கள்

வெடிக்கின்ற மலருக்கு மணத்தை யெங்கும்
வீசுகின்ற கொள்கையுண்டு ; விரும்பி நாளும்
படிக்கின்ற நூலுக்கு மக்கள் நெஞ்சைப்
பண்படுத்தும் கொள்கையுண்டு; கொடிபோல் பெண்டிர்
இடுப்புக்கு மேலுடலைத் தாங்கித் தாங்கி
இளைக்கின்ற கொள்கையுண்டு ; நமக்கும் வாழ்வை
எடுத்துயர்த்தும் குறிக்கோள்கள் இருக்க வேண்டும்,
இசைத்தமிழுக் கேழிசைகள் இருத்தல் போலே,

சித்திரையில் இளவேனில் தொடங்கு தல்போல்
சிறுவயதில் சிந்தையிலே நல்ல கொள்கை
வித்துக்கள் விழவேண்டும் ; வேட்கை யால்வாய்
விரிந்திருக்கும் சிப்பிக்குள் வீழும் மழைநீர்
முத்துக்கள் ஆவதுபோல் நமது வாழ்க்கை
முழுமைபெறும் ; செழுமையுறும் ; பதித்த வைரக்
கத்தியைப்போல் கூர்மையுடன் ஒளியும் வீசும் ;
கார்காலக் காவிரிபோல் பொங்கிப் பாயும்.

கரும்புடைந்து சிதைந்துவிட்டால் கசப்ப தில்லை
கற்கண்டு பொடியானால் புளிப்ப தில்லை ;
அரும்புடைந்து சிதைந்தாலும் தேனே யன்றி
அதிலிருந்து வேறொன்று வருவ தில்லை ;
பெருங்கொள்கை தனைநோக்கிப் போகும் போது
பெருந்தோல்வி கண்டாலும், புகழே யன்றி
வருந்துன்பம் வேறில்லை ; ஆத லாலே
வாழ்விலுயர் கொள்கைகளைக் கடைப்பி டிப்போம்.

பூத்திருக்கும் மலரெல்லாம் பிணத்திற் கென்றால்
பூக்காடு வருந்தாதா ? மனைவி யென்பாள்
காத்திருக்கக் கால்பிடிக்க மட்டு மென்றால்
கண்ணீரில் பெண்ணினமே நனைந்தி டாதா ?
மோத்தலுக்கென் றெண்ணாமல், பொடிப்போ டத்தான்
மூக்கென்றால் முட்டாளென் றிகழ்ந்தி டாரா ?
மாத்தமிழைக் கற்பதெல்லாம் சோற்றுக் கென்றால்
மதிப்பான திருக்குறளும் பிறத்தல் உண்டோ ?

பொன்னுக்கும் பொருளுக்கும், அற்பர் கூறும்
புகழுக்கும் ஆடைக்கும், வளத்தில் மிக்க
மண்ணுக்கும், மாடிவைத்த மாளி கைக்கும்
மனமயக்கம் கொள்ளுவதா இலட்சி யங்கள் ?
எண்ணத்தின் நேர்க்கோடே குறிக்கோள் ; தட்டும்
இழிவென்னும் படிக்கட்டைக் கடந்து நின்றால்
கண்ணுக்குத் தெரிவதுதான் வெற்றிப் பாதை ;
கலங்காமல் அவ்வழியில் காலை வைப்போம்.

பொன்னுக்குப் புலமையினை விற்றி ருந்தால்
புலிப்புலவன் பாரதியை இன்றி ரண்டு
கண்ணுக்குள் கொள்வோமா? சிலையெ டுத்துக்
கைகுவித்து நிற்போமா? அவனி சைத்த
பண்ணுக்கு மெய்மறந்து பாம்பைப் போலப்
படமெடுத்து நிற்போமா? உணர்ச்சி பெற்று
விண்ணுக்குப் பாய்வோமா? அடிமை யென்னும்
விலங்கொடித்து வெற்றிபல கொள்ளு வோமா?

கிள்ளிவரும் கீரையைப்போல் குப்பை மேட்டில்
கிடைப்பதன்று நற்குறிக்கோள்; குமணன் போன்ற
வள்ளலிடம் ஓடிப்போய்ப் பாட்டுப் பாடி
வாங்கிவர முடியாது; தள்ளி னாலும்
துள்ளிவரும் குழந்தையைப்போல் மடியில் வந்து
தொப்பென்று வீழாது; காத லேதும்
கொள்ளாத கொம்பொன்றை வலியச் சென்று
கொடிதழுவல் போல்நம்மைத் தழுவி டாது.

குண்டுக்குத் தம்முடலைத் தந்தும், நச்சுக்
கோப்பைக்குத் தம்முதட்டைத் தந்தும், அல்லிச்
செண்டைப்போல் சிவந்திருந்த தமது மார்பைச்
சிலுவையிருப் பாணியினால் சிதைத்துக் கொண்டும்
கொண்டவளைப் பிரிந்திருந்தும், குருத்து வாழைக்
குழந்தைகளைப் பறிகொடுத்தும், இரக்க மில்லாத்
தண்டடிக்குத் தலைகுனிந்தும் இலட்சி யத்தைத்
தாரணியில் பெரியோர்கள் நிறுத்திச் சென்றார்.

தண்ணீரின் மேல்மட்டம் உயரும் போது
தாமரையின் பூவுயரும்; இலட்சி யத்தைக்
கண்ணைப்போல் தனிமனிதன் காக்கும் போது
கட்டாயம் சமுதாயம் உயரும்; பாட்டால்
பண்ணுயரும்; புதியதொரு உவமை யாலே
பாட்டுக்கு மதிப்புயரும்; பரந்த இந்த
மண்ணுயரும் உயர்ந்தபெரும் இலட்சி யத்தால்;
மக்களுயர் வார்;எங்கும் பொங்கு மின்பம்;

---

வானொலிக் கவிதை
பொங்கல் விழா '68

# குழந்தை

பனிமலரே ! குளிர்நிலவே !
    பருமுத்தே ! பாடுகின்ற
        சிட்டே ! காதற்
கனிபிழிந்த கொழுஞ்சாறே !
    காவியமே ! கற்கண்டே !
        கருப்பஞ் சாற்றின்
நனிசுவையே ! நடமாடும்
    நல்லமுதே ! நானுக
        வந்த நீயே !
இனியதமிழ் போல்வந்த
    என்கண்ணே ! சிரிக்கின்ற
        இளங்கு ருத்தே !

காசிக்குப் போனாலும்
கங்கையிலே பக்தியொடு
மூழ்கி னாலும்
மாசிக்குப் பொங்கியெழும்
மகாமகக் குளந்தேடி
மூழ்கி னாலும்
ஆசிக்கும் ஏழைகளுக்
கன்னதா னங்கோடி
அளித்திட் டாலும்
பூசைபல செய்தாலும்
புண்ணியஞ்சேர் நோன்புபல
புரிந்திட் டாலும்

கொட்டிப்பொன் கொடுத்தாலும்
குமரியிலே குளித்தாலும்
பணக்கா ரர்க்குக்
கிட்டாத அரும்பொருளே !
கிடைக்காத புலிப்பாலே !
ஏழை கட்கோ,
தொட்டவுடன் பற்றுகின்ற
வல்லுடும்பே ! தொல்லைதரும்
காதற் காற்றுப்
பட்டவுடன் ஏழைப்பெண்
பதைபதைக்க அவள்வயிற்றில்
தைக்கும் முள்ளே !

ஆடி வரும் வெண்ணிலவே !
அசைந்துவரும் வானவில்லே !
சங்க காலப்
பாடினியும் பாணர்களும்
பரிவோடும் பதைப்போடும்
பக்கம் சேர்த்த
சோடினிய நல்யாழே !
கோவலன்வாய் வரிப்பாட்டே !
தாயும் நானும்
பாடமைந்த படுக்கையிலே
பரிவோடு தொகுத்ததொகை
நூலே ! பாலே !

சேலத்து மாம்பழமே !
செவ்வேரில் பழுத்தபலாப்
பழமே ! உன்றன்
கோலத்தில் குறுந்தொகையும் !
குறுநகையில் குறளமுதும்
கொண்ட ணைக்கும்
காலத்தில் கலித்தொகையும்
கனிமொழியில் இசையமுதும்
காணு கின்றேன் ;
வேலொத்த விழிகளிலே
விளையாடும் போர்ப்பரணி
காணு கின்றேன்,

புத்தென்ற நரகத்தில்
போயழுந்தா தெனைக்காக்கப்
பிறந்தா யென்னும்
எத்தர்களின் பொய்க்கருத்தை
எண்ணியெண்ணி என்னுள்ளம்
நாணு கின்றேன் ;
புத்தமுதை முத்தமிழைப்
போற்ருதார் சீரழிக்க
முனையும் போரில்
கத்திமுனை முகத்திருந்து
காப்பதற்கன் ருேவுன்னைப்
பெற்றெ டுத்தேன் !

எட்டிவரும் பகைவன்கை
எனைநோக்கி நீளுமுன்னே
இரண்டு துண்டாய்
வெட்டிவரும் தமிழ்மறவர்
வேந்தன்நான் ! ஆனாலும்
எனது நெஞ்சில்
எட்டிமிதித் தாய்; கன்னம்
இன்பவெறி மீதூர
இரண்டு கையால்
தொட்டடித்தாய் ; உன்னிடத்தில்
தோற்பதற்கு நாள்தோறும்
துடிக்கின் றேன்நான்.

சென்றெடுத்த பெரும்போரில்
சீறிவரும் கங்கையொடு
கடாரம் வென்று
குன்றெடுத்த தோள்களிலே
குறையாத புகழெடுத்தேன் ;
தமிழ்க்குச் சங்கம்
அன்றெடுத்தேன் ; கண்ணகிக்கும்
அழகான சிலையெடுத்தேன் ;
ஆனால் உன்னை
இன்றெடுத்த போதினிலே
இதயத்தில் துள்ளுமின்பம்
என்றும் கானேன்.

காவிரிக்குக் கரையெடுத்த
கரிகாலா ! தமிழ்ப்பகைக்குக்
காலா ! வீரம்
பாவிரித்த பாவேந்தா !
பாய்விரித்த கலஞ்செலுத்தும்
பாண்டி மன்னா !
நீவிரித்த பிஞ்சுக்கை
நீந்துகின்ற பழஞ்சோறும்
புளித்த கூழும்
பூவிரித்துக் கொட்டுகின்ற
புதுத்தேனைப் போலெனக்குச்
சுவைத்திடாதோ !

அன்னைதரும் முத்தத்தில்
அமுதிருக்கும் என்றாலும்
அதற்குப் பின்னால்
பொன்வேண்டும் பூவேண்டும்
புதுச்சேலை வேண்டுமென்ற
பொருளிருக்கும்.
கன்னல்மொழிக் கண்ணாநீ
கைம்மாறு கருதாமல்
குமண வள்ளல்
முன்னளித்த கொடைபோல
முத்தமழை பொழிகின்றாய்
மூனு மன்பால்.

தென்றல்வரும் சாளரத்தில்
தேனிலவின் பால்வெளிச்சம்
எட்டிப் பார்க்கும்
என்றெண்ணிப் படுக்கையிலே
இடம்வலமாய் என்னுடம்பைப்
புரட்டும் போதில்
அன்றிலைப்போல் உன்னன்னை
அனுப்புகின்ற முனகலொலி
அதிர்ந்து தோன்றும்.
குன்றிமணி போலிருண்ட
வெளிச்சத்தில் கோதையைநான்
நெருங்கும் போது

நகராட்சிச் சங்கைப்போல்
நான்நடுங்க நீமுழக்கம்
செய்யலாமா?
மிகவருத்தம் செய்யுமிந்தச்
செயலாலே பெற்றோர்கள்
ஒன்றாய்க் கூடிப்
பகலிரவாய் ஆராய்ந்து
பால்நிலவே கருத்தடைக்கு
விழாவெடுத்தார்.
நகைமுத்தே! நானுன்னை
வேண்டுகிறேன்; இக்குற்றம்
இனியும் வேண்டாம்.

இமைப்பிற்குள் பறக்கின்ற
இன்னூர்தி வளமனைகள்
இயன்ற செல்வ
அமைப்போடு வாழ்கவென
அன்போநான் உனைவாழ்த்தப்
போவதில்லை.
தமிழுயரத் தமிழ்மக்கள்
தாரணியில் உயர்வரென்ற
தலைமைக் கொள்கை
இமைப்பொழுதும் நீங்காமல்
இதயத்தில் இருக்கட்டும்;
ஏற்றம் கொள்வாய்.

---

ஈரோடு இலக்கியப் பேரவை ஆண்டு விழா திசம்பர் '67

# வாய்

தங்கத்தில் உயர்ந்ததென்பர் ஆட கப்பொன்;
 தலைக்குடும்பக் கூட்டத்துள் மிகவு யர்ந்த
அங்கமென்று பிரிந்திருக்கும் வதன வட்ட
 அணிமுகப்பே! கனித்தோட்டப் பெண்மு கத்துத்
திங்களுக்குள் செவ்வாயே! மலரு கின்ற
 திருவாயே! எதிரெதிரே காம வேள்கைச்
செங்கரும்பு வில்லிரண்டைப் பொருத்தி வைத்துச்
 சேர்த்ததுபோல் இருக்கின்ற அமைப்பே! உன்னைத்

துணைப்பவளத் துண்டுகளின் புணர்ச்சி யென்பேன்;
 துளைவிழுந்த தேனடைநீ என்பேன்; மென்மை
உணர்ச்சிநரம் புன்னிடத்தில் இருப்ப தாலே
 உன்னையும்நான் வீணைக்குத் தங்கை யென்பேன்;
துணைக்கோவைக் கனியிரண்டு காத லித்துத்
 தூங்குகிற காட்சியென்பேன்; அமுத ஊற்றின்
அணைக்கதவே! அடிக்கடிசென் றாடிக் கூடும்
 அதரங்கள் நடத்துகின்ற குடும்ப மென்பேன்.

காதலுக்குக் கடைதிறப்பு முத்தம்; அந்தக்
கலையாலே கட்டழகி கிளியோப் பாத்ரா
சாதித்த வெற்றிகளைக் கத்தி யாலே
சாதித்தோர் சரித்திரத்தில் எவரு மில்லை
மாதர்க்கும் ஆடவர்க்கும் முத்தந் தானே
மயல்நடத்தும் சதைப்பாலம்; அம்முத் தத்தை
நீதொடுக்கும் காரணத்தால் வாயே உன்னை
நிலவென்பேன்; பிறவுறுப்பை உடுக்க ளென்பேன்

ஐம்பொறிகள் கூட்டணியொன் றமைத்துக் கூடி
ஆள்கின்ற அரசியல்தான் மக்கள் வாழ்க்கை.
ஐம்பெரிய குழுக்களுக்குள் உணவ மைச்சின்
அதிகாரம் பெறும்வாயே! நீபி ரிந்து
வம்புசெய்தால் வங்காளக் கதைதான்; சோறு
வழங்குதற்கு நீமறுத்தால், நிமிர்ந்து நிற்கும்
சம்பகப்பூ மூக்கெல்லாம் நெரித்தெ றிந்த
சந்தைமாங் கொட்டையைப்போல் அழகி ழக்கும்.

மின்னுகின்ற பொன்னகையும் காத லன்போல்
மெல்லுடலைச் சுற்றிவரும் காஞ்சிப் பட்டும்
தன்னிடத்தில் அழகில்லாள் துணைக்க ழைத்துத்
தாங்குகின்ற சாதனங்கள்; தன்ன டிக்கே
அன்னம்தொய் யில்எழுதக் கண்ட துண்டோ?
ஆட்டமயில் பட்டாடை அணிவ துண்டோ?
புன்னகையொன் றல்லாமல் அழகில் லார்போல்
பொன்னகையை நீசுமக்கத் துணிவ துண்டோ?

தூங்குகின்ற சோம்பேறிக் கண்ணி ரண்டைத்
துயிலுணர்த்த 'விழி'யென்று பெயரை வைத்தார்
நீங்காத சுறுசுறுப்புக் கொண்ட வாயே
நின்னுழைப்பை வியக்கின்றேன்; உணவை உள்ளே
வாங்குகிறாய்; தூங்காமல் பேச்சைப் பாட்டை
வழங்குகிறாய்; முழங்குகிறாய்; முத்த மென்னும்
தேங்குழலைச் செய்கின்றாய்; ஐம்பொ றிக்குள்
திருவாயே! அட்டாவ தானி நீயே!

வலைக்கன்னி கைகேயி கணவ னும்பொன்
வழங்குமரிச் சந்திரனும் வாயே! உன்னால்
தலைக்கணியும் முடியிழந்தார்; திரௌப திப்பெண்
தழைத்தபசும் புறவிதழை அவிழ்த்து விட்டு
முளைத்துவரும் மலரைப்போல் ஆவ தற்கு
முன்னொருநாள் ஆணைபெற்றாள்; இதுவும் உன்றன்
அலைச்சிரிப்பால் வந்ததுதான்; ஆனால் காஞ்சி
அண்ணாவோ உன்னாலே அரசு பெற்றார்.

உருவத்தால் நல்லவராய் இருப்போ ரெல்லாம்
உள்ளத்தால் நல்லவராய் இருப்ப தில்லை.
அரிந்துவைத்த நுங்கைப்போல் இருக்கும் வாயே!
அமைப்பிலதை ஒத்ததுடன், உதட்டைச் சேர்த்தே
உறிஞ்சும்போ துங்கூட நுங்கைப் போல
உயர்ந்தசுவை தருகின்றாய்; ஆத லாலே
உருவத்தால் நீநல்லை; சுவைமி குந்த
உள்ளத்தா லும்நல்லை, ஊற்று வாயே!

கொட்டாவி விடுகின்றாய் என்றே உன்னைக்
குறைசொல்வர் ; விளக்கொளியைக் குறைத்துவிட்டுக்
கட்டிலறைக் கட்டழகி விடும்கொட் டாவி
காதலுக்கோர் அறைகூவல் அன்றோ ! அல்லி
மொட்டுப்பெண் வாய்திறக்கும் கொட்டா விக்கு
முகமலர்ச்சி எனப்பட்டம் சூட்டும் மக்கள்
திட்டமிட்டுப் பழிக்கின்றார் உன்னை ; இந்தத்
தீயர்களின் பேச்சுக்கு நீயஞ் சாதே,

"பிழிந்தநறுந் தேனைப்போல் யாழ்ந ரம்பு
பேசுகின்ற இன்பத்தைத் துய்ப்போம் ; பூனை
விழியைப்போல் ஒளிவீசும் வைடூரி யக்கல்
விதைத்தகணை யாழிகளை அணிவோம் ; பாரின்
அழகுண்போம், மணங்குடிப்போம்" என்று கூறி
அயற்பொறிகள் அளந்தாலும் செந்த மிழ்ப்பா
முழங்குகின்ற நாநிதியைத் தமக்குச் சொந்த
முடையவராய் எவர்பெற்றார் உன்னை யன்றி ?

வாணியம்பாடி இசுலாமியக்
கல்லூரி விழா '69

# கண்

காதலுக்கு நுழைவாயில் நான்தான்; இடையுடுக்கைக்
கலிங்கத்துப் பரணிக்கும் கடைதிறப்பு நானேதான்.
வதனக் குளத்தில் வாடி உதிராமல்
புதுமையுடன் நாள்தோறும் பூக்கும்செந் தாமரைநான்.
முகத்து விளக்குநான்; மோதிக் குதித்துவரும்
அகத்து நடிகரெல்லாம் ஆடும் திரைப்படம்நான்.
நச்சினார்க் கினியனும் நாவால் உரைப்பதற்கே
அச்சப்படுங் கருத்தை ஆழமாய் ஆடவர்க்கோர்
வீச்சால் உரைக்கும் விருத்தியுரை காரிநான்.
கொன்று உயிர்கொடுக்கும் குளிர்ந்தசஞ் சீவிநான்

கண்சண்டைக் காரியென்று கடிந்தென்னை இகழ்ந்தாலும்
என்சண்டை எப்போதும் இன்பத்தில் தான்முடியும்.
இரவல் அழகுக் கேங்குபவள் நானல்லேன்
இயற்கை அழகின் இருப்பிடம்நான்; பிறபொறிகள்
பொன்னகை பூட்டிப் போட்டியிட வந்தாலும்
என்னகை முன்னால் எடுபடுமா அவரழகு?

நாலும் அறிந்தவள்நான் நளினம் படைத்தவள்நான்.
நாணம் சிறிதுமின்றி நாலுபேர் முன்னாலே
கோணித் திறந்து கொட்டாவி விடமாட்டேன்.
அடக்க முடையவள்நான்; அவைத்தலைவர் முன்னாலே
துடுக்குத் தனமாகத் தும்மித் தொலைப்பேனா?
அரட்டை யடித்தறியேன்; ஆடவர்கள் முன்னாலே
குறட்டை விடமாட்டேன்; கூச்ச முடையவள்நான்.

கொப்பறை வாய்போல் குறும்புத் தனமாகக்
கக்கக் கெனச்சிரித்தல் கன்னியர்க்கு ஏற்றதொன்றா?
பக்கத்தில் பார்த்துப் பக்குவமாய், ஓசையின்றி
நாண முடன்சிரிக்கும் நாகரிகம் கற்றவள்நான்.
கடிக்கும் பழக்கம் எனக்கில்லை; மெதுவாக
அடிக்கும் பழக்கம் உடையவள்தான்; ஆனால்நான்
அடிக்கும் அடியேற்க ஆயிரம்பேர் காத்திருப்பார்.
என்நகை பெற்றிருந்த ஏற்றத்தி லன்றோ
கண்ணகி என்றொருத்தி காப்பியச் சிறப்படைந்தாள்.

கண்ணன் எனக்கூறும் கடவுளுண்டு; மூவுலகில்
மூக்கனென்றோ வாயனென்றோ மொழியும் கடவுளில்லை.
மீனாட்சி காமாட்சி மேலாம் விசாலாட்சி
தாமாட்சி பெற்றதெல்லாம் தம்மிருகண் ஆட்சியினால்
முக்கண்ணன் என்னும் முதற்பொருளும், என்றன்மேல்
அக்கறை கொண்டன்றோ அதிசமா ஒன்று பெற்றான்
நக்கண்ணை என்றபுகழ் நங்கையினை அறியோமா?
கதக்கண்ணன் என்றும் கண்ணாக னென்றும்

விழிக்கட் பேதைப் பெருங்கண்ண ஞரென்றும்
பெயர்வைத்துக் கொண்டதென் றன் பெருமை யறிந்தன்றோ?
எண்ணத்தில் குடியிருக்கும் இனியவனைப் பெண்டிரெலாம்
கண்ணனென் என்பதன்றிக் காதாளன் என்பாரோ?
பண்ணு முறைபொருந்தப் பாடுகின்ற பாட்டுக்குக்
கண்ணியென்று பெயர்வைத்தக் காரணத்தை அறியீரோ?

நகத்திலும் கண்ணுண்டு; நங்கையர்கள் மார்பு
முகத்திலும் கண்ணுண்டு; வியர்வையின் வாயாக
உடம்பில் இருப்பதெல்லாம் ஒவ்வொன்றும் கண்தானே!
அங்கிங் கெனுதபடி எங்கும் இருப்பவள்நான்.
தத்தித் திமியென்று தாளம் இசைப்பதனை
மத்தளத்தின் கண்ணென்பார்; வாயென்று சொல்வாரோ?
ஒருகண் மாக்கிணையின் ஓசையினைச் செவியாலே
பருகியே வள்ளல்கள் பாணருக்குப் பரிசளித்தார்.
பண்மீது சஞ்சரிக்கும் பாலகக் காட்டுமணி
என்மீது அடித்தன்றோ இசைபெற்றான்? அழும்வாயே!
உன்மீது அடித்தால் ஒப்பாரி தான்பிறக்கும்.

தேடாத சிறப்பெல்லாம் தேடிநான் பெற்றாலும்
கூடாதார் நட்பால் குறையொன்றும் பெற்றுவிட்டேன்
கண்ணனை நான்ஓர்நாள் காதோடு கூடியதால்
கட்செவி என்கின்ற கடும்பெயரில் பாதிபெற்றேன்,
பேரைக் கெடுத்த பெரும்பாவி! அதனால்தான்
உன்னைக் கொலைசெய்ய ஓர்தட்டான் குத்தினனோ?

தோற்காதென் றுன்னையெல்லாம் சொன்னாலும்,
என்னிடத்தில்
தோற்கா திருக்கச் சிறப்பென்ன பெற்றுவிட்டாய்?
என்னிடத்தில் நன்மணியைப் பெற்றவள்நான்; கேள்காதே
உன்னிடதில் நீபெற்ற துரைப்பதற்கும் அருவருப்பே!

இமைக்கூற்பு வேலிக்குள் இருப்பவள் நான்; எப்போதும்
தூசியரைக் கண்டால் தோன்றாமல் மறைந்துகொள்வேன்.
வேசியிந்த மூக்கோ விருப்புமுடன் நாள்தோறும்
தூசியரை ஏற்கத் துளிவெட்கப் படுவதில்லை.
கண்ணாடி என்றன் கணவனென்ப துலகறியும்;
என்ன கொடுமையடி! இம்மூக்குச் சக்களத்தி
கைப்பிடித்த வென்றன் காதலனைக் கொண்டதுடன்
மூக்குக் கண்ணாடியென்று மொழிகின்றாள் வெட்கமின்றி!

மூக்குக் கதையை மொழிந்தால் மிகக்கொடுமை!
மூக்குநீண் டிருப்பவரும், மூக்குக் குறைந்தவரும்
ஆக்கும் செயலால் அரசியலே கலகலக்கும்.
நீண்டதொரு மூக்கின்மேல் நெடுங்காதல் கொண்டன்றோ
ஆண்டனி ஆவியுடன் அரசியலைத் தோற்றுவிட்டான்.
மூக்குக் குறைந்தவொரு மூளியினால், தென்னிலங்கை
தீக்குள் புகுந்து சிதைந்தகதை தெரியாதா?
குன்றெடுத்த பெருந்தோளும் கொடைகொடுத்த கையும்
அன்றெடுத்த பெரும்போரில் அறுந்தகதை யாராலே?
ஆணவ மூக்கே! ஐம்பொறியின் சாக்கடைநீ!
ஒருவழியில் நடக்காத ஒழுக்க முடையவள்நீ!

புல்லறிவு பெற்ற பொடிக்கள்ளி! பொடிப்போட்டு
உன்னைக் கெடுப்பதுடன் ஓய்ந்தாயா? உட்காரும்
திண்ணை தனைக்கெடுத்தாய். தெருக்கதவை
நீகெடுத்தாய்
ஆடை கெடுத்தாய்; அறைச்சுவரெல் லாம்கெடுத்தாய்;
தூணைக் கெடுத்துத் தொலைத்தாய்; உன்னெதிரில்
காணும் பொருள்கள் அத்தனையும நீகெடுத்தாய்!
ஊரைக் கெடுக்கும் உன்செயலால். இலக்குவனுன்
சீரைக் கெடுத்தான்; தெரியாதா உன்சேதி?
கண்ணைக் கொடுத்தவர்கள் நாயனார் ஆனதுண்டு;
உன்னைக் கொடுத்தவர்கள் உருப்பட்ட சேதியுண்டா?

மூக்குப் புராணம் இருக்கட்டும்; மூடிவைத்த
யாக்கைக் கைகாரியின் அழகென்ன வாழ்கிறதாம்?
என்னைக் காண்பதற்கு எவரேனும் கூசுவரோ?
சாரைக்கண் என்றென்னைச் சற்றே இகழ்ந்தாலும்
ஓரக்கண் பார்வையில்தான் உலகமே தழைக்கிறது.
வானத்தில் தோன்றும் வளர்மதிபோல், ஆடையின்றி
நானெழுந்து வந்தாலும் யாரென்னைக் கூசிடுவார்?
மேனியே! பிறர்பார்க்க விரும்பாத காரணத்தால்
நாணிப் புதைந்தாய் நான்கைந்து ஆடைக்குள்!
கள்ளத் தனம்பெற்ற காரணத்தால் நீயாடைக்
குள்ளே மறைந்துவிட்டாய்; உன்புத்தி தெரியாதா?
கானகத்தில் ராமன் கண்ணீர் வடித்ததுன்றன்
கூனல் விளைந்த கொடுமையன்றி வேறுண்டா?
பொய்யாக மாறிப் புதைகின்ற உன்னைப்போய்
மெய்யென் றெவன்சொன்னன்? மெய்ப்பொருளை
உணராதான்.

வாட்படையாய் வேற்படையாய் வதன மதிக்குடைக்கீழ்
நாற்பொறியை ஆளும்நடுப்பொறிநான்; தோன்றுமிந்த
மண்ணுலகே என்னுள் அடங்குமென்ப தாலன்றே
கண்ணகல் ஞாலம எனப்பெரியோர் உரைத்தார்கள்.
நனவுலகம் அத்தனையும் நான்முகன் படைப்பென்றால்
கனவுலகம் படைக்கின்ற கர்த்தாவும் நானன்றோ?
இம்மை மறுமை இருமையிலும், மானிடர்கள்
எம்மையன்றி வேறே எப்பொருளைத் தேடுகிறார்?
மறுமையில் தாமரைக் கண்ணுலகும், இம்மையிலே
பெருமலார் தாம்அரைக் கண்ணுலகும் தேடுகின்றார்.
உறுதிப் பொருள்நானிவ் வுலகத்தில்; ஆகையினால்
கருதித் தொடர்வீர் எனை.

ஈரோடு இலக்கியப் பேரவை
ஆண்டு விழா டிசம்பர் '70

# புகார்

கடியலூர் உருத்திரங் கண்ணனார் தமதுநாக்கு
அடிகளால் அளந்த அலைப்பட் டினத்தைப்
புகார்நகர் என்று புகல்வது பொருத்தமே
காவிரிப் பெண்ணும் வங்கக் கடலும்
கடற்கரைக் காதல் நடத்துவது கண்ட
நகர மக்களின் நாக்குப் புகாரும்;
பொன்னிறப் பூங்கொடி கண்ணகி யாளின்
படுக்கையைக் கண்ணீர்ப் படுகையாய் மாற்றி
மாதவிப் பூவின் தாதினைக் கிளறும்
கோவலன் பற்றிய கொடிய புகாரும்,
மருமகள் கண்ணகி மூக்கி லிருந்து
வருமூச் செல்லாம் பெருமூச் சென்று
மாசாத்து வான்செட்டி கூறும் புகாரும்.
'கோவலன் என்னும் கொம்பு முறிந்தது;
படிகளைத் தாண்டாப் பத்தினிக் கன்றிக்
கொடிகளுக் கேது விதவைத் தன்மை?
அடுத்தவோர் கொம்பை அணைக்க மறுத்துப்
படுத்துக் கிடப்பதேன் மாதவிப் பூங்கொடி?''

என்று
கட்சி மாறும் காதல் அரசியல்
முத்திரைப் பொதுமகள் சித்திரா பதிக்கிழம்
வாயால் எழுப்பும் ஒயாப் புகாரும்.
'அரைக்காத சந்தனம், விரைக்காத நன்செய்
வண்டுகிண் டாத தண்டுத் தாமரை,
கோக்காத முத்துக் கூட்டம், தென்றல்
தாக்காத சோலை, தரிக்காத சேலை
இருப்பதால் என்ன பயனோ? பாவம்!
மணிமே கலையை மாதவிக் கொடியவள்
அணிமே கலையாய் ஆக்க மறுக்கிருள்'
என்று கூறி இளைஞர்பட் டாளம்
மன்று தோறும் எழுப்பும் புகாரும்...
மலிந்தகா ரணத்தால்இம் மாநகர் தன்னைப்
புகார்நகர் என்று புகல்வது பொருத்தமே!

இங்குக்
கொடிப்புலி உறங்கும் கோட்டைமா ளிகையில்
ஆட்டன் அத்திக்கு அழகிய மகளையும்,
கோட்டுக் களிற்றுக்குக் குமரிப் பிடியையும்
தழுவக் கொடுத்துத் தன்தோள் இரண்டை
வெற்றிச் செல்விக்கு விட்டுக் கொடுத்தவன்
கரிகால் வளவன்; அந்த வளவனே
பங்கு போடாத சிங்கா தனத்தில்
தங்கி யிருந்து தமிழ்ப்பெரு நிலத்தை
ஆண்டவன்; இந்த அழகுப் புகாரில்

விழாத புகழை விதைத்துச் சாவில்
எழாதவன் ஆணுன் என்பதை அறிவோம்.

எள்ளி வந்தவர்க் கிடியேறு போன்ற
கிள்ளி வளவனும் நலங்கிள்ளிச் சோழனும்,
தமிழ்ப்பெரும் புகாரைத் தலைநக ராக்கித்
தனியர சோச்சிய தழும்பு மறவர்கள்.
பாடலை விரும்பிச் சங்கம் அமர்ந்து
கூடலை ஆண்ட மன்னர்கள், விண்ணின்
அளவுக்குக் கோயில் எடுத்தனர்; ஆனுல்
நிலவுக்குக் கோயில் எடுத்த பெருமை
நிச்சயம் புகார்க்கே! பிறநகர்க் கில்லை,

மைக்கண் மகளிர்க்கு மாசு கற்பித்துப்
பொய்க்கரி கூறும் புல்லரை திருடிப்
பதுக்கும் கள்வரைப் பட்டப் பகலில்
சதுக்கப் பூதம் மிதித்திங்கும் கொல்லுமாம்.
சதுக்கப் பூதம் கிடைக்கு மாயின்
சட்ட சபையின் வாசலில் இன்று
கட்டி வைத்துக் கண்ணியம் வளர்க்கலாம்.

புனல்விளை யாடியும் பொழில்விளை யாடியும்
பாடல் ஓர்ந்துக் நாடகம் நயந்தும்
பட்டில் தமது பொன்னுடல் பதுக்கியும்
ஆவி உடையில் அழகை மறைத்தும்

நகைத்தும் சிரித்தும் நகர மக்கள்
பகலையும் இரவையும் பறக்க வைத்தனர்.
வானக் கூரையின் வயிற்றைக் கிழிக்கும்
இமயக் குடுமியில் புலியைப் பொறித்து,
வாளைச் சுழற்றி வடபுலத் தாரின்
சிண்டைப் பிடித்தே ஆட்டிய மல்லர்கள்
நண்டைப் பிடித்தும் ஆட்டி மகிழ்ந்தனர்.

மணியிழைப் பவரை, அம்மணி குடைந்து
பணிபுரி பவரை இங்குக் காணலாம்.
கன்னம் விற்பவர் தெருக்களில் நுழைந்து
வண்ணம் விற்பவர் வலம்வரக் காணலாம்.
களிமயிற் றோகைக் காரிகை யார்கள்
எலிமயிர்க் கம்பளம் இங்கே நெய்தனர்.

நெய்தல் நிலத்தில் இந்நகர் இருப்பினும்
கருப்பு வில்லைக் கையில் எடுத்து
நெருப்பு நாடகம் நிகழ்த்தும் காமனின்
கணைம யக்கமும் சவிதையில் காணும்
திணைம யக்கமும் இங்கே காணலாம்.
கறங்கும் வட்டக் கால்தே ரோட்டம்
சென்ற வழியில் அன்றையப் பெண்கள்
இரங்கும் நெய்தற் காட்சி யோடு
புணர்தலும் புணர்தல் நிமித்தமும் இந்தப்
புகார்நகர்க் கரையில் நிகழ்வ துண்டு.

மணவாய்த் தென்றல் மாலைப் பொழுதில்
புலால்வாய்க் கொக்குகள் புணரக் கண்டு
சைவத் தாமரைப் பெண்கள், தம்மிதழ்க்
கைகளால் கண்களை மூடிக் கொள்வதும்;
தமதுள் ளத்தில் நாணம் மிகுவதால்
குமரி அரும்புகள் குனிந்து கொள்வதும்
இங்கு மிகழும் இனிய காட்சிகள்.
அலைகடல் விழுங்கிய அழகிய புகாரைக்
கலைகளை வளர்த்த காவிய நகரைக்
கனவுகள் ஆக்கிக் கண்டோம்; அந்நகர்
ஆரூர்க் கலைஞரின் அரிய முயற்சியால்
கண்முன் எழுந்தது; காணவா ரீரே!

வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரி
முத்தமிழ் விழா '70

# கோவலன்

காதலியர் முத்தமிடச் சிவந்த கன்னம்
    கன்னியர்கள் புரண்டதனுல் சிவந்த மார்பம்
ஆதரவாய்க் குமணன்போல் ஏழை யர்க்கே
    அள்ளியள்ளிக் கொடுத்ததனுல் சிவந்த கைகள்
மாதவியாள் கூந்தலையும் கோடு யர்ந்த
    மகரயாழ் நரம்பினையும் தடவித் தொட்டுக்
கோதியதால் சிவந்தவிரல், இவைகள் யாவும்
    கொண்டதனுல் கோவலனேர் செவ்வேள் ஆனுன்.

தொடுந்தோறும் புதியபொருள் தொடரு கின்ற
    தூயதமிழ்க் குறளைப்போல் வளரும் செல்வம் ;
விடுந்தோறும் அலைகடல்மேல் விரைந்து சென்று
    வெளிநாட்டை விலைபேசிக் கொணரும் கப்பல்,
நெடுந்தேர்கள், பல்லக்கு நிலத்தில் தாவும்
    நிலாக்கூட்டம் போல்வெள்ளைக் குதிரைக் கூட்டம்,
அடர்ந்தபெரு மாளிகைகள் பெற்ற தாலே
    அரசகுடிக் கடுத்தகுடி யாக வாழ்ந்தான்.

காவிரியும் வங்காள விரிகு டாவும்
கைகோர்த்துக் காதலிக்கும் பூம்பு காரில்
பூவிரியும் நித்திலப்பூம் பந்த ரின்கீழ்
பொற்கொடியைக் கண்ணகியை மணந்து
கொண்டான்.

"காவியத்தில் பிறந்தவளே! சங்கந் தந்த
கலித்தொகைபோல் இனிப்பவளே! பேகன் ஆண்ட
ஆவிகுடிக் கண்ணகிக்குப் பின்னால், பெண்மை
அரசிருக்கும் கண்ணகியே! அனிச்சப் பூவே!

"எட்டிநடந் தெதிரில்வரும் வான வில்லே!
இறங்கிவரும் வெண்ணிலவே! என்றன் மீது
பட்டவுடன் உயிர்தளிர்க்கத் தீண்டு கின்ற
பைங்கொடியே!" என்றெல்லாம் பேசிப் பின்னர்
சட்டையினைக் கழற்றிவிட்டுப் பிரிந்து செல்லும்
சாரைப்பாம் பினைப்போல நிலாமுற் றத்தில்
தொட்டணைத்த இன்பத்தின் நினைவை மட்டும்
தோகையிடம் விட்டுவிட்டுப் பிரிந்து சென்றான்.

மலைக்குன்றம் போலவரும் களிற்றி யானை
மதச்செருக்கை அஞ்சாமல் அடக்கி வைத்தும்
கொலைக்கஞ்சாப் பூதத்தின் கொடுவாய்ப் பல்லின்
குருதிவெறிக் கஞ்சாமல் அருகிற் சென்றும்
கலைக்கரசன் என்றபுகழ் சேர்த்து வைத்தும்
காவிரிப்பூம் பட்டினத்தில், உயர்ந்த மேரு
மலைமீது மதிபோல நிமிர்ந்தி ருந்தோன்
மாதவியின் முன்னாலே குனிந்து விட்டான்.

தச்சனது பட்டறையில் புறப்ப டாத
தங்கத்தேர் மாதவியோ, கோவ லற்குப்
பச்சைமணி மாலைதந்தாள் ; மயக்கந் தந்தாள் ;
படுத்துறங்கப் பஞ்சணையாய்த் தோளைத் தந்தாள்.
கொச்சைமொழி பேசுகின்ற கிளிக்கூட் டங்கள்
கூடிநின்று பொதுக்கூட்டம் நடத்தும் காவில்
நச்சரிக்கும் சாதலினை மாத விக்கு
நாள்தோறும் அவன்தந்தான் ; ஊடல் தந்தான்.

பூப்பந்தல் புன்னைமரம் போடு கின்ற
புகார்நகரக் கடற்கரையில், புதுக்கொ ழுந்துத்
தீப்பரப்பும் மாமரங்கள் மலர்வி ரித்துத்
தேன்சிதறும் இளவேனிற் பருவந் தன்னில்.
மாப்பிள்ளை கோவலனும் அரங்கில் ஆடும்
மாதவித்தேன் மலர்க்கொத்தும் பிரிய லானார்.
பூப்பட்டுப் பொன்னுறைக்குள் தூங்கும் யாழைப்
புழுதியிலே புரளவிட்டுப் பாணன் போனான்.

ஊர்சுற்றப் புறப்பட்டுத் தெருக்கள் தோறும்
உருண்டுருண்டு திரிந்தாலும், முடிவில் ஓர்நாள்
தேர்வந்து கட்டாயம் நிலையைச் சேரும்.
தேர்போலக் கோவலனும் சுற்றி விட்டுக்
கார்குழலை கண்ணகியை வந்த டைந்தான்.
காலொடிந்து கையொடிந்து தோற்றுப் பின்னர்
போர்வீரன் நிற்பதுபோல் எதிரில் நின்றான் ;
புதுவாழ்வைத் தொடங்குதற்குத் திட்டந்தந்தான்.

"காவிரிநீர் சித்திரையில் இளைத்தல் போலக்
கண்ணகியே உன்னுடம்பு தேய்ந்து விட்டாய்;
நீவிரிக்கும் புன்னகையை அன்றி, இன்று
நீதுறந்தாய் மற்றநகை; புலவர் சங்கப்
பாவிரிக்கும் மதுரைக்குச் செல்லு வோமா
பழம்பொருளை வாணிபத்தில் மீட்ப தற்கு
பூவிரிக்கும் முகத்தழகி!" என்று கேட்டான்
புறப்பட்டாள் கண்ணகியும் புள்ளி மான்போல்.

கொடிப்பந்தர் கொம்போடு சாய்வ தைப்போல்
குலைவாழை மரத்தோடு சாய்வ தைப்போல்
அடிதோறும் விழுதிறங்கி அகன்றி ருக்கும்
ஆலமரம் அடியோடு சாய்வ தைப்போல்
முடிமன்னன் பாண்டியனும், மாடக் கூடல்
மூதூரில் வாழ்பவரும் உடன் இறக்க
அடிசாய்ந்து கோவலனும் பிணமாய் வீழ்ந்தான்;
அன்னநடைக் கண்ணகியும் சிலையாய் ஆனாள்.

பொங்கிவரும் உணர்ச்சிக்குக் கரையி டாமல்
புரண்டுவரும் காட்டாற்று வாழ்க்கை வாழ்வோன்
அங்குசமில் லாப்பாகன் யானை ஏறி
அழிவதைப்போல் கட்டாயம் அழிவான் என்று
கங்கை கொண்ட தமிழ்நாட்டில் வாழு கின்ற
கட்டறுந்த காளைகளுக் குணர்த்த வேண்டித்
தங்கமலை சாய்வதைப்போல், இலக்கி யத்தில்
தமிழ்வணிகன் கோவலனும் சாய்ந்து பட்டான்.

திருச்செங்கோடு கண்ணகி விழா சூன் '65

# கண்ணகி

தேம்பும் கடற்கரையில்
திருவிழா நடத்துகின்ற
பூம்புகார் மக்களே !
என்னைத் தெரிகிறதா ?
ஏசாச் சிறப்பின்
இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வானுடைய
மருமகளைத் தெரிகிறதா ?
குறையாத பெருஞ்செல்வக்
குன்றின்மேல் வீற்றிருந்த
மறைநாய்கன் பெற்ற
மடக்கொடியைத் தெரிகிறதா ?

மறந்திருக்க மாட்டீர் ; இம்
மண்ணில் பிறப்பெடுத்துப்
பெருங்கண்ணீர்க் காப்பியத்தைப்
பேசவைத்த கண்ணகிநான் !

அந்நாள் ஆண்ட
அரசன்செங் குட்டுவன்
சோழனையும் வேளிரையும்
பாண்டிய மன்னனையும்
கடல்சூழ் இலங்கைக்
கயவாகு வேந்தனையும்
வேற்றுநாட் டவரான
நூற்றுவர் கன்னரையும்
ஓர்மேடை யில்ஏற்றி
உள்ளன் புடன்எனக்கும்
பார்புகழ விழாவெடுத்தான்.

இந்நாள் குட்டுவனே,
ஆயிரத் தெண்ணூறு
ஆண்டு கழிந்தபின்னர்
கடல்கொண்ட புகாரைக்
கலைப்பொருளால் புதுப்பித்தும்
பிரிந்து சென்றவர்கள்
மீண்டுமோர் மேடையிலே
அறிந்து பழக
அரியதோர் விழாவெடுத்தான்.

முறுக்கிய மீசையுடன்
சேரன்செங் குட்டுவன்
சிரிப்பு முகமெனக்குத்
தெரிகிறது ; என்முகத்தைச்

சந்திக்கும் நெஞ்சத்
துணிவின்றிப் பாண்டியன்
குந்திக் கிடக்கும்
காட்சி புரிகிறது.

பஞ்சுபோல் நரையோடு
பழுத்த பழமாகச்
செஞ்சொற் கவுந்தி
அடிகளிங் கிருக்கின்றார்.

குனிந்ததலை நிமிராமல்
என் தங்கை மாதவி
பனிமுல்லைக் கொடிபோலப்
பக்கத்தில் இருக்கின்றாள்.
இன்றைக்கும் அவளழகு
குறையவில்லை; அவள்நினைத்தால்
குன்றப் பெருந்தோள்
கோவலரைத் தன்னுடைய
பார்வையில் கட்டிப்
பாட்டால் சிறைசெய்து
நொடிக்கும் மெல்லிடையால்
நோகவைத்துச் சதங்கைகொஞ்சும்
அடிக்குள் மறுபடியும்
அகப்படுத்தி விடுவாளோ
என்றெண்ணும் அச்சம்
எனைவிட்டு நீங்கவில்லை,

என்றன் தலைவரே!
இனியதமிழ்க் காதலரே!
பொன்போலும் மேனிப்
புகார்த்தலைவர் கோவலரே!
விட்டகுறை தொட்டகுறை
இருப்பதனால், இன்றைக்கும்
மாதவியின் கண்ணும்
மதர்த்தஉம் திருவீழியும்
மோதித் திரும்புவதை
முன்னிருப்போர் பார்க்கின்றார்.

சின்னப் பருவத்தில்
கைப்பிடித்துப் பராமுகமாய்
என்னைப் பிரிந்து
புகார்வளர்த்தீர்; என்னுடைய
பொன்னின் சிலம்பை
விற்கப்போய்ப் புகார்வளர்த்தீர்.
இன்றைக்கும் இந்த
மேடையிலே மீண்டும்
புகாரை வளர்த்துப்
புகார்த்தலைவர் எனும்பெயரை
நீங்கள் மறுபடியும்
நிலைநிறுத்த எண்ணுதீர்.
அன்றைக்கு நமைப்பெற்ற
வணிகர் இருவருமே
பணத்தோடு பணம்சேரப்
பார்த்து மணமுடித்தார்.

ஆனையின் மீதேறி
அணியிழையார் முரசறைய
மாநகர்க் கீந்தார்
மணம்; அன்றி நம்முடைய
உள்ளக் கருத்தை
உணர்ந்துமணம் செய்யவில்லை
களவியலை முடித்துப்பின்
கற்பியலைத் தொடங்குதல்
பழந்தமிழர் மணவாழ்க்கை;
ஆனால்நாம் இருவருமே
களவியல் இன்றிக்
கற்பியலில் கால்வைத்தோம்.
என்னைக் கைப்பிடித்த
மணநாளில், வந்தவர்கள்
'காதலர்ப் பிரியாமல்
கவவுக்கை நெகிழாமல்
தீதறுக!' என்று
எச்சரிக்கை செய்தார்கள்.
கோத்தஉம் கைகளைக்
குரங்குப் பிடியாக
பிடிக்கத் தெரியாமல்
பேதைநான் ஏமாந்தேன்.

எழுநிலை மாடத்தில்
ஏறிநாம் இருக்கையிலே
வண்டுபோல் என்னை
வட்டமிட்டு வட்டமிட்டு

'மாசறு பொன்னே !
வலம்புரிமுத் தே !'என்று
பேசிய பேச்செல்லாம்
நினைவில் இருக்கிறதா ?
நினைவில் இருக்க்
நியாயமில்லை ; ஏனென்றால்
அதையே அப்படியே
என்தங்கை மாதவிபால்
ஒப்பித் திருப்பீர்நீர் ;
உம்மை அறிவேன்யான்.

ஏதேதோ அருகிருந்து
பேசினீர் ; என்றாலும்
மாதுநான் வெட்கத்தால்
வாயைத் திறந்ததில்லை.
'பேசா மடந்தையோ ?
என்றுநீர் கேட்டீர்கள்.
'வண்டுகள் ஓயாமல்
பேசும் ; கீழ் உள்ளமலர்ச்
செண்டுகள் வாய்திறந்து
பேசும் வழக்கமில்லை'
என்று நான்நினைத்தேன் ;
எடுத்துரைக்கத் துணியவில்லை.

பேசா மடந்தையாய்
இருந்தாலும் அடிக்கடி
சிந்திக்கும் வழக்கத்தைச்
சிறப்பாகப் பெற்றவள்நான்.

செவ்வேள் என்றும்மை
எல்லாரும் கூறுவது
எவ்விதம் பொருத்தமென
எண்ணினான் பார்த்ததுண்டு.
வான்மகள் தேவ
யானையை மணந்தசெவ்வேள்
கான்மகள் வள்ளியைக்
காதலித்துத் திரிந்தகதை
கைப்பிடித்த மணநாளில்
எனக்குப் புரியவில்லை.
பின்னாளில் அன்றோ
பேதைக்குப் புரியவைத்தீர்!
கன்னி நான்திறந்த
காதல் இலக்கியத்தின்
முன்னுரை முடிவதற்குள்
முடிவுரையைக் காட்டிவிட்டீர்.

ஆடும் அடிகளினால்
இந்தப் புகார்நகர
மேடையை ஆட்டிவைத்த
மாதவிப் பூங்கொடியே!
சித்திரா பதிபெற்ற
முத்திரைப் பசும்பொன்னே!
இச்சை தருமாலை
என்ற தொருமாலை
பச்சை மணிமாலை
பரிசாகப் பெற்றவளே!

உன்றன் அரங்கேற்றம்
ஊரறிய நடக்கையிலே
என்றன் கோவலரும்
நானுமங்கு வந்திருந்தோம் ;
ஆடலை பார்த்தேன் !
அருகில் இருந்தவென்றன்
கோவலர் உள்ளக்
குரங்காட்டம் பார்த்திருந்தேன்.
கண்களால் உன்னைக்
கற்பழித்தார் ; அன்றைக்கே
எதிர்காலம் என்றனுக்குப்
புதிர்காலம் ஆயிற்று !

பண்கள் பிசைகின்ற
பாட்டுவாய் மாதவி !
உன்னைக் குறைகூற
ஒருப்படேன் ; தமிழ்நாட்டுப்
பெண்டிர் குறைகளுக்கு
வித்திட்டோர் ஆடவரே !
போதுமென்ற உள்ளமுடன்
இந்நாட்டில் ஆடவர்கள்
மாதொருத்தி யோடு
வாழும் வழக்கமில்லை.
ஆகத்தில் ஒருத்தியும்
அருகினிலே ஆசையுடன்
போகத்திற் கொருத்தியும்
கொள்ளாத கடவுளுண்டா ?

பெண்ணைக் கடவுளென்று
பேசுகின்ற புலவர்களோ
கற்பு நிலைபற்றிக்
கதைப்பார்கள் ; இலக்கியத்தில்
பரத்தையர் பிரிவுக்குப்
பாதியிடம் கொடுப்பார்கள்.
எனக்குமுன் வாழ்ந்த
கண்ணகிக்கும் பேகனுக்கும்
பிணக்கு வந்ததிந்தப்
பேதைமையி னாலன்றோ ?

தஞ்சைப் பெருங்கோயில்
தந்தபெருஞ் சோழனுக்குக்
கொஞ்சுமொழிக் கோதையர்
ஏழுபேர் இருந்தனராம் !
பெருமலை போல
மதுரையில் வீற்றிருந்த
திருமலை நாய்க்கனுக்கு
இருநூறு மனைவியராம் !
கற்பை எப்போதும்
இந்நாட்டின் ஆடவர்கள் !
புற்கட்டாய் நினைப்பவர்கள் ;
புழுதியிலே மிதிப்பவர்கள்.
ஆகையால் என்றன்
ஆருயிர்க் கோவலரும்
மாதுன்னைத் தேடி
வந்ததிலே விந்தையில்லை.

சிந்தைக் கினியவளே !
இதற்குமுன் உன்னைநான்
சந்தித்துப் பேசுகின்ற
வாய்ப்பினைப் பெற்றதில்லை.
உன்னை நானென்று
கேட்கின்றேன் ; மாதவி ! உன்
தன்னலத் தாலன்றோ
தலைவரை நாமிழந்தோம் ?
காதலர் அன்பைக்
சுருத்தோடு நாமிருவர்
பாதியாய்ப் பகிர்ந்திருந்தால்
பதைப்பேது வாழ்க்கையிலே ?
ஒருநாளென் கோவலரை
அனுப்பிநீ வைத்திருந்தால்
திருநாளாய் எண்ணி
மகிழ்ந்திருப்பேன் ! செய்தாயா ?
படுக்கையறைப் படமாக்கி
நான்மணந்த கோவலரை
ஆணி அடித்தன்றோ
அறைச்சுவரில் மாட்டிவிட்டாய் !
பொங்கு வருங்காதற்
போதை தலைக்கேறிச்
செங்கண் மாதவியாய்
நின்றாய் ! நான் அப்போது
கண்ணீர் வடிக்கும்
கருங்கண் கண்ணகியாய்
வெந்நீரில் மீனாய்
வேதனைவாய்ப் பட்டிருந்தேன்.

நெருப்பிடையே என்காதல்
போகட்டும்; ஆனால்நீ
உருப்படியாய்க் கோவலரின்
உயரன்பைக் காத்தாயா?

இடியையே என்வாழ்வில்
பொறுத்திருந்தேன்; கடற்கரைப்பாட்(டு)
அடியைப் பொறுக்க
உன்னால் முடியவில்லை.
புதிர்ப்பாட்டுப் பாடினார்
என்கணவர்; அதற்குநீ
எதிர்ப்பாட்டுப் பாடி
எல்லாம் இழந்துவிட்டாய்!
அவசரக் காரி! உன்
அவசரப் புத்தியினால்
விதைநெல்லை யேகுற்றி
வேகவைத்துத் தின்றுவிட்டாய்!
அன்று நீசற்றுப்
பொறுத்திருந்தால், மதுரைக்குச்
சென்று பாண்டியனால்
சீரழிந் திருப்போமா?

ஆரியப் படைகடந்த
பாண்டியனே! உன்வீரம்
காரிகையின் மடியிலா
கவிழ்ந்து விழவேண்டும்?

கோப்பெருந் தேவி
கோபிப்பாள் என்றெண்ணி
அவசர மாய்ஓடி
ஆராய்ச்சி செய்யாமல்
என்நகை யோடென்
புன்னகையும் பறித்துவிட்டாய் !
கவியரசர் எல்லாம்
காதலிலே மூழ்கிப்
புவியை மறந்து
வாழ்வதிலே தப்பில்லை.
பாராளும் அரசியல்
தலைவரெல்லாம் காதலினை
ஊறுகாய் போல
ஒருவிரலால் தொடவேண்டும்.
ஊறுகாய் ஒன்றையே
உணவாகக் கொண்டுவிட்டால்
வேறு வினைவேண்டாம் ;
வெண்கொற்றக் குடைசாயும் !

பெண்ணாகப் பிறப்பெடுத்து
நான்வாழ்ந்த அந்நாளில்
என்றன் உணர்வுகளை
எவரும் மதிக்கவில்லை.
கல்லாக மண்ணாகக்
கருதினீர் ! இன்றைக்கும்
கல்லில் சிலைவடித்துக்
கைகூப்பி வணங்குகிறீர் !

பெருமை பலபேசும்
தமிழினமே! அன்றுநான்
இருபது வயதில்
எல்லாம் இழந்தேனே!
நெருப்புப் பெருமூச்சில்
நின்று பொசுங்கியவென்
விருப்பக் கனவுகளுக்
குயிர்கொடுத்து மீண்டும்
எழுப்ப முடியுமா
இந்நாட்டின் ஆடவரால்?

---

பூம்புகார்க் கலை விழா 18-4-'73

# கடல்

நீர்க்குளமும் ஏரிகளும்
நிலவுடம்பின் காயங்கள் ;
கார்க்கடல் நானே
கரைபோட்ட பட்டாடை
பாருக் கெனவுரைத்துப்
பாட்டில் வடித்துவைத்தார்,
நாற்பதில் நமைப்பிரிந்த
நாடகத்துச் சுந்தரனார்
பாரியென்னும் வள்ளலைப்போல்
பவளமும் பருமுத்தும்
வாரி வழங்குகின்ற
வாரிதிநான் ; நாற்றிசையும்
பரந்து கிடக்கின்ற
பரவைநான் ; நிலமடந்தை
மார்கழிக்கும் நதிப்பாலை
மாந்தி விளையாடும்
ஆர்கலிநான் ; கடக்கின்ற
கடல்நான் ; நீர்களிலே
முன்வைத்து மதிக்கின்ற
முந்நீர்நான் ; ஆவலுடன்
பொழுதெல்லாம் ; ஆற்றோடு
புணருகின்ற புணரிநான்

உப்பில்லாப் பண்டம்
குப்பையில்; நீர்க் குடும்பத்துள்
உப்புள்ள பண்டம்நான் ;
கண்ணீரில் வியர்வையிலே
உப்பிருக்கும் என்றே
உரைத்தாலும் அவ்வுப்புச்
சோற்றுக்குப் பயன்படுமா ?
சுவைகூட்டும் திறனுண்டா ?

கத்து கடல்நான்தான்
முத்துக்குப் பிறப்பிடம்.
அரும்புகின்ற வியர்வையை
முத்தென்பர் ; அம்முத்தை
விரும்பி அணிவார்யார் ?
வெறுத்து வழித்தெறிவார்.

எங்கள் குடும்பத்தை
ஏந்தும் தலைவன்நான்.
இத்தரையில் தண்ணீரின்
மொத்த வணிகன்நான்.
ஆவியாய் மாறி
அனைவரையும் வாழவைக்க
ஓய்வின்றிப் பாடுபடும்
ஒப்பற்ற தொண்டன்நான்.
என்னிடத்தில் செத்தவர்க்கும்
இலக்கியப் புகழுண்டு.

என்னிடத்தில் மாய்ந்த
இளம்பெரு வழுதியென்பான்
கன்னித் தமிழ்ப்புலவர்
கவிதையிலே ஏறிவிட்டான்.

கற்பகத்தின் பூங்கொம்பாய்க்
காமன்தன் பெருவாழ்வாய்
அற்புதமாய் அவதரித்த
ஆரூர் அழகரசி
என்றன் உயர்பெருமை
எண்ணியன்றே தன்பெயரைப்
பரவையார் என்று
பலர்புகழச் சூட்டிநின்றாள்.
காஞ்சித் திரையன்
கடலின் குழந்தையன்றே?
பொன்னி நதியிழுத்துப்
புரட்டிவந்த அத்தியினை
மன்னன் கரிகாலன்
மகளிடத்தில் நான்சேர்த்தேன்.

'காதலரைச் சேர்ப்பதிந்தக்
கடல்வேலை; எனவேதான்
என்நெய்தல் நிலத்தில்
இருக்கும் தலைவனுக்குச்
செந்தமிழ்ப் புலவர்கள்
'சேர்ப்பன்' என்று பெயர்வைத்தார்.

என்றன் கரையில்
எழுகின்ற காதலைத்தான்
இளங்கோ முதலாக
எல்லாரும் பாடுகின்றார்.

ஏரியும் குளமும்
எல்லாநீர்த் தேக்கமும்,
கற்பனைக் கெட்டாக்
கடலென்னைப் பார்த்துப்பின்
அற்ப மனிதன்
அகழ்ந்த சிறுபள்ளம்.
என்னில் ஒருதுளி;
கண்மாய் மதகிலே
கள்ளனைப்போல் ஓடுகின்ற
தண்ணீர்ப் பாம்பினங்கள்.
வேதனையில் பிறக்கின்ற
வியர்வையோ அழுக்குநீர்;
எங்கள் குலத்தின்
இழிபிறவி; ஏழைநீர்.

தண்ணீர்க் குடமெடுத்துத்
தேடிவரும் வஞ்சியரை
வழுக்கி விழச்செய்து
பாசத்தால் வஞ்சிக்கும்
குளத்தைப்போல் என்னிடத்தில்
குற்றம் எதுவுமில்லை.

தாமரை காட்டும்
நீர்க்குளத்தைப் பார்த்துத்தான்
தாமரை காட்டித்
தையலார், இந்நாளில்
ஆடை அணிகின்ற
அநாக ரிகங்கற்ருர்.
கோதையரின் பண்பைக்
குலைப்பது குளமன்ரே ?

ஊறும் தமிழமுதை
ஊற்றும் புலவரைநாம் ;
வாரியார் என்கின்ரேம்
ஏரியார் என்போமா ?
கலையில் வல்லவரைக்
கலைக்கடல் என்கின்ரேம் ;
தமிழ்ப்புலமை மிக்கவரைத்
தமிழ்க்கடல் என்கின்ரேம்,
ஏரியென்ரே குளமென்ரே
எவரேனும் சொல்வதுண்டா ?

என்றன் பெருமை
உணராதார் சுண்டக்
கடலையுண்டான் என்பர்
அகத்தியனே ! இந்நாட்டின்
இடங்குறைய உண்டவன்நான் ;
என்னை எவருமென்பார் ?

---

வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரி முத்தமிழ் விழா '71

# குறிஞ்சி

குறிஞ்சிக்கும் எனக்குமுண்டு பொருத்தம் ; சேலம்
குறிஞ்சிநிலம் ; அங்கிருக்கும் சேர ராயன்
பெருஞ்சிறப்புக் கொண்டமலை என்ம லைதான் ;
பெருத்தசுளைப் பலாப்பழங்கள் மத்த ளம்போல்
திரண்டுருண்டு வேர்மீது படுத்துத் தூங்கத்
தேடிவரும் இளங்கரடி அப்ப ழத்தை
உருட்டிவிளை யாடுகின்ற கொல்லி என்னும்
உயர்மலையும் என்மலைதான் ; அக்குன் றத்தில்

காதுகளைச் சாமரமாய் வீசிக் கொண்டு
கடுகிவரும் களிறுண்டு ; கடுவன், வேங்கைப்
போதுகளைப் பறித்தடிக்க, குமரி மந்தி
புன்சிரிப்பைத் தூதனுப்ப, தோழி யர்கள்
ஆதரவாய்ப் பெற்றோரின் அருகில் சென்றே
அறத்தோடு நிற்கின்ற காட்சி யுண்டு.
'சீதமதி வான்மீது வரட்டும் ; செய்வோம்
திருமணத்தை' எனப்பெற்றோர் கூறு வார்கள்.

பலநூறு ஆண்டுகட்கோர் முறையே தோன்றும்
பயனுள்ள நூல்போலக் குறிஞ்சிப் பூக்கள்
சிலவாண்டுக் கொருமுறையே பூக்கும் ; காந்தள்
சிற்றிதழ்கள் பாக்குவெட்டி போலத் தொங்கும்.
அழகான ஓர்காளை வருதல் கண்டால்,
அழகரசி ஓடையிலே சருக்கி வீழ்வாள் ;
குலைவாழைப் பழத்தையொரு களிறு தூக்கிக்
கொள்வதுபோல் அவளையவன் மீட்டுச் செல்வான்.

வானுலகம் சிறந்ததென்பர் ; மணம்ப ரப்பும்
வளஞ்செறிந்த கற்பகக்கா இருக்கு தென்பர் ;
தேனுக்கு மேலினிக்கும் அமுதம், அங்குத்
தெருவெல்லாம் ஓடுதென்பர் ; உயர்ந்த தேவ
கானத்தைக் கனிமொழியால் தோற்க டிக்கும்.
கன்னியர்கள் கைப்புறத்தில் இருப்பர் என்பர்.
வானத்தில் இத்தனையும் இருந்தும், கந்தன்
வள்ளிக்குக் குறிஞ்சியினைத் தேடி வந்தான்.

அருவியென்னும் நீர்ப்பாம்பு கல்லி டுக்கில்
அசைந்துவரும் குறிஞ்சிநிலக் கடவுள் கூர்வேள்
முருகனென்பர் ; நான்கூட முருகன் ; அந்த
முருகனைப்போல் சிலநாட்கள் மானைத் தேடிச்
சிறுகுடியின் பக்கத்தில் செல்வேன் ; வாயால்
சிரிப்புமணி யடிக்கின்ற குறத்திப் பெண்கள்
வருவார்கள் தினைகாக்க என்று நிற்பேன் ;
வள்ளிமான் இந்நாளில் வருவ தில்லை.

வளமான இலக்கணமும் சொல்ல மைப்பும்
வாய்க்காத மொழியெல்லாம் சிலநூற் றூண்டில்
கிழமாகிக் கந்தையைப்போல் கிழிந்து போகும்.
கேட்பார்க்குப் புரியாத புதிராய்ப் போகும்.
பழகுதமிழ்ச் சொல்லருமை, படிப்ப வர்க்குப்
பார்த்தவுடன் புரிந்துவிடும்; நமது முன்னோர்
தழுவுவதைத் தழிஞ்சியென்பர்; காத லர்கள்
தனியிடத்தில் குறுகுவதைக் குறிஞ்சி யென்பர்.

குறிஞ்சியிலே புணர்ச்சியினைப் பொருளாய் வைத்த
கொள்கையினை நாமுணர வேண்டும்; அங்கே
மரச்செறிவில் மாங்குயில்கள் புணரும்; பூத்த
மதுமலரில் வண்டினங்கள் புணரும்; நல்ல
விரைக்கொடிகள் மரந்தோறும் புணர்ந்து, காதல்
விளையாட்டை நமக்குணர்த்தும்; பொங்கிப் பாயும்
அருவிகளின் மத்தளப்பே ரிசையில், ஆங்கே
அனைத்துயிரும் விழாவெடுத்து மணந்து கொள்ளும்

மதுக்குடங்கள் உடைப்பதுபோல் கொம்பு தோறும்
மலருடைக்கும் வேங்கைமரத் தடியில் நிற்கும்
செதுக்காத சிலைப்பெண்ணை ஒருவன் கண்டால்
சீயென்று உதறிவிட்டுச் செல்வான்? அந்தப்
பதுக்காத தங்கத்தைப் பார்ப்பான்; அங்கே
பைங்கிளிகள் கொஞ்சுவதைப் பார்ப்பான்; பொங்கும்
புதுக்காதல் தோன்றுதற்குக் கார ணங்கள்
போதாவா? குறிஞ்சிநில அமைப்பே காதல்!

கூதிரினை முன்பனியை யாமந் தன்னைக்
குறிஞ்சிக்குப் பொழுதாக வைத்த நோக்கம்
யாதென்று நினைக்கின்றீர் ? கூதிர் காலம்
அடைமழையாய்ச் சிறுதூறல் பெய்யும் காலம் ;
கூதையடிக் கும்பனியோ நடுக்கும் காலம் ;
கும்மிருட்டு நடுயாமம் ; இந்தப் போதில்
வீதியிலே நடமாட்டம் குறைவு ; காதல்
விரும்புகின்ற காதலர்க்கு வேட்டை தானே !

குறிஞ்சியினுக் குரியபொருள் களவே ! அந்தக்
குற்றமில்லாக் காதல்மணம், பண்டை நாளில்
பெருஞ்சிறப்புப் பெற்றிருந்த நிலையைக் கண்டோம் ;
பின்னாளில் காளையர்கள், களவை மட்டும்
விரும்பிவந்தார் ; கற்புக்கு விடைகொ டுத்தார் ;
விளையாட்டாய் இக்களவு போன தாலே
குறிஞ்சியிலே களவில்லை ; நகர்ப்பு றத்தில்
கும்மாளம் போடுவதைக் காணு கின்றோம்.

அந்நாளில் குறிஞ்சியிலே பெண்ணைக் காணும்
ஆடவருக்(கு) ஐயமொன்று நிகழ்வதுண்டு.
பெண்ணணங்கா ! ஆய்மயிலா ! என்றே உள்ளம்
பேதுற்றுக் காளையர்கள் நிற்பர் ; இன்றோ
முன்குடுமி உடல்போன்ற காலு றைகள்
முகமூடி கண்ணாடி மேற்சட் டைகள்
என்றதிருக் கோலத்தில் இருப்ப தாலே
இவள் ஆணா ? பெண்ணா?என் றையம் தோன்றும்.

அகத்துறையில் ஐயத்தின் பின்னுல், காணும்
அடுதத்துறை துணிவென்று சொல்வர்; வாச
முகப்பொடியால், குதிச்செருப்பால், டம்பப் பைகள்
முன்கையில் தொங்குவதால், ஒருவண் ணத்தில்
வகைப்படுத்திச் சேலேசட்டை வளையல் பொட்டு
வரிசையுடன் அணிவதனுல், உதட்டுச் சாயம்
மிகைப்படுத்திப் பூசுவதால் 'ஆகா! இந்த
மெல்லியலாள் பெண்!' என்று துணிவர் ஆண்கள்.

குறிஞ்சியிலே மறத்தமிழன் அன்று வாழ்ந்த
குற்றமற்ற வாழ்க்கையினைக் கண்டோம்; ஓடி
வரும்பளிங்கு நீரோடை தனிற்கு ளித்து,
வசந்தத்தை வரவேற்று, பொதிகைக் குன்றில்
இருந்துவரும் தென்றலுக்கு வாழ்த்துக் கூறி,
இனியகுயில் இசையருந்தி. இயற்கை யோடு
பொருந்தியன்று காதலித்து வாழ்ந்த வாழ்க்கை
பொற்காலம்! அக்காலம் இனிமேல் ஏது?

ஓர்பாட்டில் தொண்ணூற்று மூன்று பூவின்
உயர்சிறப்பைக் குறிஞ்சியிலே பாடி, பொன்றுப்
பேர்பெற்ற கபிலனுக்குப் பின்னுல், நானும்
பின்பாட்டுப் பாடவந்தேன்; கபிலன் பாட்டோ
கார்பூத்த மலர்ப்பாடல்; என்றன் பாட்டோ,
கபிலமலர்க் கடியிலுள்ள காம்புப் பாடல்.
சீர்பெற்ற ஐந்திணைக்குள் பிறபாட் டெல்லாம்
செவ்வாழை! குறிஞ்சியொன்றே பலாப்பாட் டாகும்.

---

கரந்தைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா 14-4-'73

# மஞ்சள்

கொஞ்சும் வேளாண்
குடும்பத்தி லேபிறந்த
மஞ்சள்நான் மதிப்பான
நஞ்சை நிலத்தலைவி.
வேலிக் கயிறாக
விளங்குகின்ற மங்கையரின்
தாலிக் கயிறு
தாங்கும் கருப்பொருள்நான்.

சிவந்த இறால்மீன்போல்
செழித்து வளர்பவள்நான்,
நாவற் கனிமேனி
நங்கையர்க்கும் குறைபோக்கி
முகப்பள பளப்பு
மூட்டுகின்ற மூலிகைநான்.

கல்யாண மென்னும்
காதல் சவாரிக்குக்
கைகயிலே பூட்டுகின்ற
கடிவாளக் கங்கணம்நான்.

பொன்னும், நூலோட்ட
வைடூரியக் கல்லும்
தண்ணீர்க் கடற்கரைத்
தாழை மணமடலும்
என்நிறத்தைப் பெற்றதனால்
எல்லாரும் மதிக்கின்றார்.
செஞ்சொல் பத்திரிகை
எத்தனைதான் இருந்தாலும்
மஞ்சள்பத் திரிகையிலே
மாணவர்க்குச் சுவையதிகம்.

அறுசுவைக்கு ஏங்கும்
ஆடவரைத் தாம்மயக்கக்
கறிசமைக்கும் போது
கவனமாய்ச் சுவைபார்த்துப்
பக்குவ மாய்க்குழம்பில்
பாவையர்கள் போடுகின்ற
சொக்குப் பொடிநான் ;
மிக்கசுவை நாயகிநான்.

சுள்ளியைப் போலச்
சிறிதாக இருந்தாலும்
பிள்ளையா ரைக்கூடப்
பிறப்பிக்கும் உயிர்ப்பொருள்நான்.

பொன்னை இழப்பர்
பொருளிழப்பர் மங்கையர்கள் ;
என்னை இழக்க
எப்போதும் சம்மதியார்.

கற்றைக் குழலழகி
கண்ணகியின் ஒளிமிகுந்த
நெற்றித் திலகத்தை
நீக்கிய நெடுஞ்செழியன்
ஆசை மனைவி
ஆருயிரை அவனடியில்
வீசி எறிந்ததேன் ?
வீணை நரம்புதரும்
கீதப் புதுப்பாட்டுக்
கிளியரசி, தென்மதுரைப்
பூதப்பாண் டியன்தேவி ?
பொய்கையென்று தீக்குளத்தில்
மாண்டு மடிந்ததேன் ?
மஞ்சளில்லை என்றதனால்.

இக்காலத் தில்கடையில்
இருக்கின்ற மணப்பொடிகள்
சக்களத்தி யார்எனக்கு ;
சந்தனமும் அப்படித்தான்.
மெருகு குலையாமல்
மேனி சுருங்காமல்
மருமகளாய் இருக்கும்வரை
மங்கையர்கள் மணப்பொடியைப்
பூசி மகிழ்ந்தாலும்
புதுநாட்டுப் பெண்வந்து
மாமியார் ஆகிவிட்டால்
மஞ்சளைத்தான் தேடுகிறார்.
மஞ்சள் மகிமையை
மாற்ற முடியாது.

---

திருவெறும்பூர்ப் பொங்கல் விழா '72

# கவிஞரின் கடைதிறப்பைப் பற்றி...

## குயில் (பாவேந்தர் நினைவிதழ்), 1-4-70

கவிதையுலகில் புதுப்புது மாறுதல்கள், புரட்சி எண்ணங்கள் புதுக்கி மின்னிக்கொண்டிருக்கின்றன. தமக்கெனச் சிலர் தனியானதோர் நடையினை ஏற்படுத்திக் கவிதையுலகினைச் சிறக்கச் செய்கின்றனர். அத்தகு வரிசையிலே கடைதிறப்பும் ஒன்று கவிஞரின் முயற்சி புதுமுயற்சி எனினும், புரட்சி முயற்சியாகும. புதுமை இலக்கியங்கள் தமிழில் தோன்றுவதற்குரிய வரிசையை நினைவுபடுத்துகிறது கடைதிறப்பு.

## முரசொலி, 30-7-69

இதுவரை கவிதை விமரிசனம் செய்த மற்றைய கவிதை நூல்களுக்கும் இதற்கும் முற்றிலும் வேறுபாடுண்டு. ஏனைய நூல்களைப்போல் ஏதோ எழுத வேண்டும் என்பதற்காக எழுதப் பட்ட நூலன்று இந்நூல். ஒப்புயர்வற்ற கருத்துச் செறிவும் கற்பனை நயமும் நிலைறந்த நன்னூல் கடைதிறப்பு ......இதைப் போன்ற தரம் வாய்ந்த கவிதை நூல்கள் சில ஆண்டுகட்கு ஒரு முறைதான் வருகின்றன. தமிழ்ப் பற்றுடையோர், இலக்கியம் வளரவேண்டுமென்று நினைப்போர் கட்டாயம் படித்து இன்புற வேண்டிய நூல் கடைதிறப்பு.

## டாக்டர் தமிழண்ணல்

*மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,* 13—8—69

தங்கள் கவிதையில் பழகு தமிழும் அழகு நடையும் ஆற்றொழுக்கான ஓசையும் அமைந்துள்ளமை கண்டு பாராட்டுகிறேன்.

**'கிளியுடம்புத் தாமரையின் இலை'**

நல்ல நிற உவமை.

**'காலடியால் காதலரை வேவு பார்க்கும்**
**காமன்'**

நல்லதொரு கற்பனை.

**'அரைவட்டத் தாவணியை விரித்துத்தோகை**
**அழகுமயில் ஆடும்போது'**

மயிலாட்டம் கண்ணெதிரே காட்சியளிக்கிறது.

**'ஏமாற்றக் கன்னி யானேன்**
**இலையுதிர் காலமானேன்'**

என்பதில்தான் எத்துணை அவலம்!

*கருக்கொண்ட நிலையில் ஒரு பெண்,*

'பொன்னுடல் காரி யின்று
பொருளுடல் காரி யானேன் ;
என்மடி கனத்துப் பார
இளநீர்த்தெங் காகி விட்டேன்.'

*என்றுரைப்பதிலே நல்லதொரு நயம் மிளிர்கிறது.*

'பண்மொழி ! கவிஞ ரைப்போல்
படைப்பாற்றல் நமக்குத் தானே ?'

*என்னும்போது கவிஞர்களும் பெண்களும் படைப்பாற்றல் உடையவர் என்று கூறுவது மிகப்பொருத்தம்.*

*தமிழைப் பற்றிய அரிய கருத்து :*

'திங்கள்வாழ் மண்டி லத்தில்
தென்னாப் பிரிக்க நாட்டில்
துங்குவாழ் மலேயா சாவா
தொலைவு மோரீசில்; மற்றும்
எங்குவாழ் கின்ற போதும்
இத்தமிழ்க் குலத்தைச் சேர்க்கும்
சங்கிலி தமிழே என்று
சாற்றுவாய் அன்புத் தோழி !'

**பேராசிரியர் எழில்முதல்வன்**
**சென்னை-5 21-8-69**

*கடைதிறப்பு ஒருவகையில் உணர்ச்சியின் மடைதிறப்பாக இருக்கிறது. முற்றிலும் புதிய நோக்கில் அமைந்த அக்கவிதைகளைப் படித்துப்படித்து மகிழ்ந்தேன். சொல்லாட்சிச் சிறப்பு, உவமைநலம், கூறும்முறை அனைத்தும் புதுமையே, அண்மைக் காலத்தில் வெளிவந்துலாவும் கவிதை நூல்களில் நான் படித்தவரை, கடைதிறப்பு தனி இடத்தைப் பெறுகிறது.*

**பேராசிரியர் இ. சு. பாலசுந்தரம்**
**மதுரை 27-8-69**

*'முருகு' என்ற சொல்லின் பொருள்கள் முழுமையும் நூலுக்குப் பொருந்தும். எண்ணைக் குழந்தைகளைக் கவிதையெழில் பொங்கப் 'பிரவசம்' செய்திருக்கிறீர்கள். நூலை 'அசை' போட்டு வருகிறேன், விரைவில் 'சீர்' தூக்கி, காமஞ் செப்பாது வாய்மையோடு 'தளை' செய்து, அஞ்சல் 'யாப்புச்-செய்கிறேன். 'அணி' பெற்ற தங்கள் கவிதையணங்கு அடுத்த தாய்மைப் பேற்றைப் பத்துத் திங்களுக்கு முன்பே அடையட்டும். அதில் எங்களுக்கு ஆவலும் அவசரமும் அதிகம். 'பாரதி' பாரதி தாசனுக்குப் பிறகு கவிதை நூலின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லிக் கேட்டு வாங்கும் நூலாக இது இருக்கிறது' என்று மதுரை மீனாட்சி புத்தக நிலைய உரிமையாளர் சிலிர்ப்புச் செய்தி தருகிறார்.*

## அரிமாப் பதிப்பகத்தார் வழங்கும் அரிய நூல்கள்


| | |
|---|---|
| சுவடிக்கலை இரா. இளங்குமரன் | 35—00 |
| பாவேந்தர் பிள்ளைத்தமிழ் பேரா ந. இராமநாதன் உரை | 32—00 |
| நோயின்றி வாழ முடியாதா ? | 5—00 |
| இயற்கை மருத்துவ அடிப்படை | 4—00 |
| 'புற்றுநோய்' பச்சை உணவால் நலம் பெற்ற வரலாறு | 1—50 |
| வாருங்கள் பேசுவோம் உடல்நலம் பற்றி | 2—25 |
| நலமுடன் வாழவேண்டுமா ? | 2—75 |
| மருந்தின்றி வாழமுடியாதா ? | 4—25 |
| குட்டநோயும் மருத்துவமும் | 6—00 |
| இனியசாறுகளும் இனிக்கும் பயன்களும் | 1—50 |
| உடலோம்பலும் இயற்கை மருந்துகளும் | 10—00 |

சிறந்த நூல்கள் வெளியிடுவோர் மற்றும் விற்பனையாளர் :

தொலைபேசி : 66221

**அரிமாப் பதிப்பகம்**

அம்மாப்பேட்டை, சேலம்-636 003.



உதய சூரியன் எழுந்தால் உலகினில்
ஒருநாள் உருவாகும்—நம்
இதய சூரியன் எழுந்தால் சிறந்த
இலக்கியம் உருவாகும்.

ஒருசிலர் கவிதை சருகு போல
உலர்ந்து போவதுண்டு—நாட்டில்
ஒருசிலர் கவிதை உதய சூரியன்
ஒளிபோல் ஆவதுண்டு.

அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும்
அறிஞர்கள் ஆவதில்லை—கவி
வரிசையில் நிற்பவர் அத்தனை பேரும்
வான்புகழ் பெறுவதில்லை.

முத்தமிழ்ச் சிந்தனை முருகு சுந்தரம்
முத்தாரக் கவிஞர்—அவர்
பத்துப் பாட்டைப் போலப் பாடல்
படைக்கும் நற்கவிஞர்.

— உவமைக் கவிஞர் சுரதா

பொன்முடி அச்சகம், சேலம்-3, தொலைபேசி: 66221